# வைப்பகம்

2025 யூலை - செத்தெம்பர் மலர் 9 இதழ் 07 - 09

அறிவுத் தேடலின் மையம்

ரூ. 80/-


02 பொது நம்பிக்கைப் பொறுப்புக் கோட்பாட்டினுள் இலங்கை மத்திய வங்கியின் வகிபாகம்

10 நிலைபெறத்தக்க நிதி பற்றிய நோக்குகள்

17 திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் பிணையுறுதிக் கொள்கை

25 ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றம் மீதான கட்டமைப்பு சமவாயத்தின் நடவடிக்கை: தணித்தல், இசைவாக்கமடைதல், இழப்பு அத்துடன் சேதம் என்பன மீதான உலகளாவிய காலநிலை சார்ந்த கட்டுப்பாடுகளை மதிப்பிடுதல்


9 788374 485647

இக்கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் கட்டுரையாளர்களின் கருத்துக்களேயன்றி அவை இலங்கை மத்திய வங்கியின் கருத்துக்களாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை

தொடர்பூட்டல் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

# பொது நம்பிக்கைப் பொறுப்புக் கோட்பாட்டினுள் இலங்கை மத்திய வங்கியின் வகிபாகம்



**எம். வருணி பிரியதர்ஷினி**
மூத்த உதவிப் பணிப்பாளர்
சட்டத் திணைக்களம்

### அறிமுகம்

2021/2022இல் இலங்கை எதிர்நோக்கிய அண்மைய பேரண்டப் பொருளாதாரக் கொந்தளிப்புக்கள் சுதந்திரத்தின் பின்னர் மிகவும் மோசமான நிகழ்வொன்றாகக் காணப்படுகின்றது. குறித்த காலப்பகுதியில் முன்மதியற்ற இறை மற்றும் நாணயக் கொள்கைகள் என்பவற்றினால் தூண்டப்பட்டு நாடு அதன் ஆழமான பொருளாதார பேரழிவை எதிர்கொண்டதுடன், அதனைத்தொடர்ந்து இவை சமூக மற்றும் அரசியல் அமைதியின்மைக்கு வழிவகுத்தன[1]. இந்நெருக்கடியைத் தீர்ப்பதற்காக மத்திய வங்கியினாலும் அப்போதைய அரசாங்கத்தினாலும் கொள்கை வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவை சரியாகப் பயனளிக்காதிருந்ததுடன், இறுதியாக நாடு மீண்டும் ஒருமுறை பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவியை நாட வேண்டியிருந்தது.

நெருக்கடியின் போது, அரசும் அதன் ஏனைய உறுப்புகளும் முறிவடைந்ததாகவும் அத்துடன்/ அல்லது நாட்டின் நலனுக்கான தமது கடமைகளை மேற்கொள்வதில் கவனயீனத்துடன் இருந்தமை குறித்து பொதுமக்களிடத்தில் பெரும் எதிர்ப்பு நிலவியது. முன்னாள் அரச தலைவர், நிதி அமைச்சர்கள், இலங்கை மத்திய வங்கி (மத்திய வங்கி) மற்றும் உயர் மட்டத்திலிருக்கும் அரச அதிகாரிகள் போன்றவர்களின் செயற்பாடுகள் அல்லது செயலாற்றாமைகள் காரணமாக இலங்கை குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு, கூட்டாகவும் கடுமையாகவும் தற்போதைய பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தின என குற்றஞ்சாட்டப்பட்டு, அவர்களுக்கெதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை நியாயாதிக்கத்திற்குப் பல சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்தனர். இலங்கை மத்திய வங்கி உள்ளிட்ட இத்தகைய விடயதானங்களின் பல்வேறு பதிலிறுப்பாளர்கள் பொது மக்களினால் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொது நம்பிக்கைப் பொறுப்பினை மீறியுள்ளதுடன், அதன்மூலம் நாட்டிலுள்ள பிரசைகளின் அடிப்படை உரிமைகளை மீறியதற்காகப் பொறுப்புடையவர்களாகின்றனர் என இலங்கை உயர் நீதிமன்றமும் தீர்ப்பு வழங்கியது[2].

பொது நம்பிக்கைப் பொறுப்புக் கோட்பாட்டை சட்டக் கண்ணோட்டமொன்றிலிருந்தும், உச்ச மட்டத்திலான பொது அதிகாரசபையொன்றாக மத்திய வங்கியின் மீது அது எவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது, மத்திய வங்கி பொது நம்பிக்கைப் பொறுப்பினை மீறியதாக ஏன் குற்றஞ்சாட்டப்பட்டது மற்றும் அதன் கடமைகளைச் செயலாற்றுகையில் பொது நம்பிக்கைப் பொறுப்பினை நிலைநிறுத்துவதில் மத்திய வங்கியின் வகிபாகம் என்பன தொடர்பில் மிகப் பரந்தளவில் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### உலகளாவிய நிகழ்வாக பொது நம்பிக்கைப் பொறுப்புக் கோட்பாடு

பொது நம்பிக்கைப் பொறுப்புக் கோட்பாடானது உரோமச் சட்டம் மற்றும் ஆங்கிலச் சட்டம் ஆகிய இரண்டிலிருந்தும் உருவாக்கப்பட்டுள்ளது[3]. இக்கோட்பாடு உரிய

1 https://www.orfonline.org/research/sri-lankan-economy-crisis-consolidation-and-collaboration 26.03.2025 அன்று அணுகப்பட்டது. 2022 யூனில், ஐக்கிய நாடுகள் சபை இலங்கையில் "முழு அளவிலான மனிதாபிமான அவசரநிலை" ஏற்படக்கூடுமென எச்சரித்து, எவ்வித காரணமுமின்றி மக்களால் எதிர்கொள்ளப்படும் கடுமையான இன்னல்களைச் சித்தரிக்கின்ற விதத்தில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலையிலிருக்கும் மக்களுக்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 47 மில்லியன் தொகை உதவிக்கான அழைப்பினை விடுத்தது.

2 SC FR 195/2022 and SC FR 212/2022 ஆகிய இலங்கையின் உயர் நீதிமன்ற தீர்ப்புக்களைப் பார்க்கவும்.

3 கி.பி 527-565 காலகட்டத்தின் போது கான்ஸ்டான்டினோப்பிளிலினை மையமாகக் கொண்ட கிழக்கு உரோமில் பேரரசர் ஜஸ்டினியன் ஆட்சி செய்தார். ஜஸ்டினியன் கோவை என்று அழைக்கப்படும் அவரது புகழ்பெற்ற கோவையின் கீழ், காற்று, கடல், நீர்வீழ்ச்சி, ஓடும் நீர் போன்ற இயற்கை வளங்களைத் தனிப்பட்ட முறையில் வைத்திருக்க முடியாது. ஆனால் பொதுவாக பொது மக்களின் நலனுக்காக அர்ப்பணிக்கப்பட வேண்டும் என கோவைப்படுத்தப்பட்டது. அதேவேளை, ஆங்கிலச் சட்டத்தின் கீழ், "நம்பிக்கைப் பொறுப்பு" என்ற எண்ணக்கருவானது சமத்துவம் என்ற கருத்திலிருந்தும் ஆரம்பகால நீதித்துறைத் தீர்ப்புக்களிலிருந்தும் தோன்றி, பிரபுக்களின் அவையானது அலை காணப்படும் அனைத்து கப்பல் போக்குவரத்துக்கும் தகுந்த நதிகளின் படுகையும் கடலின் முகத்துவாரங்கள் அல்லது கிளைகளும் சட்டப்படி அரசரின் உடைமையாகும் என தீர்மானித்துள்ளது. ஆனால் அரசின் இவ்வுரிமையானது மேற்குறிப்பிட்ட விடயப்பரப்பின் நலனுக்காக பயன்படுத்தப்படவேண்டியதாக காணப்படுகின்றது.

நியாயாதிக்க எல்லைகளிலுள்ள இயற்கை வளங்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டு பிரயோகிக்கப்படுகின்றது எனப் புலப்படுகின்றது. தொழில்நுட்பம், தொழில்மயமாக்கல், வளர்ந்து வருகின்ற மக்கள்தொகை மற்றும் உலகமயமாக்கல் பரிமாணத்தின் புதிய வலு மூலங்களின் கண்டுபிடிப்பு போன்றவற்றின் துரித அபிவிருத்தியானது, முன்னெப்பொழுதுமில்லாத வகையில் உலகச் சுற்றுச்சூழல் முறைமையினை அதிர்ச்சிக்குள்ளாக்கியதாகப் புலப்படுகின்றது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இவ்வதிர்ச்சிகள் மாசடைதல், காடழிப்பு, வெள்ளப்பெருக்கு மற்றும் அடிக்கடி ஏற்படும் காலநிலை மாற்றங்கள் போன்ற உலகெங்கிலும் சுற்றாடல் மற்றும் பொருளாதார பிரச்சனைகளை ஏற்படுத்தியுள்ளன. எனவே, பொது நம்பிக்கைப் பொறுப்புக் கோட்பாடானது பிரசைகளின் தனி நலனுக்காக நாட்டின் சூழலைப் பாதுகாக்க அரசாங்கங்கள் மீது பொறுப்புக்கூறுந்தன்மையை விதிக்கின்ற அதிக செயற்றிறன்மிக்கதும் மிகவும் நம்பிக்கைக்குரியதுமான சட்ட விதியொன்றாக உலக சமூகத்தால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது[4].

குறிப்பாக, ஐக்கிய அமெரிக்கா, இந்தியா மற்றும் தென்னாபிரிக்கா மற்றும் கென்யா போன்ற நாடுகளில் உள்ள நியாயாதிக்க செயல்முனைப்பின் கீழ், சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக செயற்றிறன்மிக்க ஆயுதமொன்றாக இக்கோட்பாடு குறித்துரைக்கப்பட்டுள்ளது[5]. முதன்மையாக காற்று, கடல், நீர் மற்றும் காடுகள் போன்ற குறிப்பிட்ட சில மூலவளங்கள் ஒட்டுமொத்தமாக தனியார் உரிமையாக்கப்படுவது முற்றிலும் நியாயமற்றது எனும் அடிப்படையில் இவை மக்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்ற கொள்கையில் இக்கோட்பாடு தங்கியுள்ளது. இயற்கை அன்னையின் பரிசாக விளங்கும் மேற்குறிப்பிட்ட மூலவளங்கள் அவர்களது வாழ்க்கைத் தரத்தினைக் கருத்திற்கொள்ளாமல் ஒவ்வொருவருக்கும் இலவசமாகக் கிடைக்கப்பெறச் செய்ய வேண்டும். பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மூலவளங்களைப் பாதுகாக்கும் பொருட்டு இக்கோட்பாடானது அரசாங்கத்தையும் அதன் சாதனங்களையும் கட்டளையிடுகின்றது. வாவெரு எதிர் குடியரசு[6] எனும் வழக்கில் கென்யாவின் மேல் நீதிமன்றமானது, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பல ஏனைய நியாயாதிக்கங்கள் பொது நம்பிக்கைப் பொறுப்புக் கோட்பாட்டினைப் பயன்படுத்துவதாக மேற்கோள்காட்டிய வேளையில், மக்களின் நலனுக்காக சுற்றாடலையும் இயற்கை வளங்களையும் பாதுகாப்பதில் அரசாங்கத்திற்கு நம்பகக் கடமை உள்ளதென எடுத்தியம்பியது.

## இலங்கையில் பிரசித்தப்படுத்தப்பட்ட பொது நம்பிக்கைப் பொறுப்புக் கோட்பாடு

பொது நம்பிக்கைப் பொறுப்புக் கோட்பாடானது இலங்கையில் புதியதொரு நெறிமுறையல்ல. அர்ஹத் மஹிந்தவின் வருகையிலிருந்து இக்கோட்பாடு வேரூன்றியுள்ளது. அர்ஹத் மஹிந்த, அரசன் தேவநம்பியதீசனுக்கு வழங்கிய பேருரையானது ஏனையவற்றிற்கிடையில் பறவைகள் மற்றும் விலங்குகள் உட்பட அனைவருக்கும் வாழ்வுரிமை உண்டு எனவும் அவற்றின் வாழ்வுரிமையையும் உலகின் எப்பக்கத்திற்கும் நடமாடுவதையும் புவியின் பாதுகாவலராக இருக்கும் அரசன் உறுதிசெய்தல் வேண்டும் எனவும் வலியுறுத்துகிறது[7].

சட்டக் கண்ணோட்டத்தில், இலங்கையில் உள்ள உச்ச நீதிமன்றங்களின் நீதித்துறைத் தீர்ப்புக்களும் சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக இக்கோட்பாட்டை பயன்படுத்தியிருக்கின்றன. புலங்குலம எதிர் கைத்தொழில் அபிவருத்தி அமைச்சின் செயலாளர்[8] எனும் வழக்கில் உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பில், தனியார் திறந்தவர் இயற்கையால் வழங்கப்பட்டதும் மனிதர்களின் ஆரோக்கியத்திற்கும் மகிழ்ச்சிக்கும் அத்தியாவசியமானதுமான இயற்கை வளங்களை ஆக்கிரமித்தலானது ஒழுக்கக்கேடானது அல்லது சட்டவிரோதமானது என எடுத்தியம்பியது. ஹங்கேரி[9] வழக்கில் சர்வதேச நீதிமன்றத்தில் நீதிபதி வீரமந்திரி அவர்களின் தீர்ப்பை மேற்கோள் காட்டி, அரசு என்பது நம்பிக்கையுடன் அதிகாரத்தைத் பிரயோகிக்க வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டுள்ள பாதுகாவலர் என நீதிபதி அமரசிங்க வலியுறுத்தினார். அதனைத் தொடர்ந்து வந்த வழக்குகளில், அனைத்து இயற்கை மூலவளங்களும் மக்களின் நலனுக்காக பாதுகாக்கப்படுவதையும் பேணிக்காக்கப்படுவதையும் அரசின் அனைத்து உறுப்புக்களும் உறுதிசெய்ய வேண்டும் எனவும் அரசு நிலைபெறத்தக்க அபிவிருத்தியைக் கருத்திற்கொள்ளல் வேண்டும் எனவும் பொது நம்பிக்கைப் பொறுப்புக்

4 http://ir.kdu.ac.lk; "The Application of Public Trust Doctrine as a Mechanism to Ensure Environmental Protection by Means of Law: A Comparative Analysis between Sri Lankan and Indian Legal Context" p. 131, by GJHK Siriwardana Faculty of Law, General Sir John Kotelawala Defence University, Ratmalana, accessed on 26.03.2025

5 https://www.lst.lk; "Public Trust Doctrine as people's Sovereignty; a narrative beyond environmental protection" by Nayantha Wijesundera, accessed on 30.03.2025

6 Misc. civ appli 118 0f 2004, extracted from LST review, volume 24 issue 315 2014 and via https://www.globalhealthrights.org, accessed on 30.03.2025

7 இலங்கை நீதிச் சேவைகள் சங்கம் சட்ட இதழ் - (2016 பதிப்பு -IV) ISSN 2357-2884, "பொது நம்பிக்கைப் பொறுப்புக் கோட்பாடு" ராஜிதா பெரேரா, சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூத்த அரச சட்டத்தரணி, பக்கம் .03

8 2000 (3) S L R 243; புலங்குலம் வழக்கு என்றும் அறியப்பட்டது

9 ஹங்கேரி எதிர். சுலோவாக்கியா [1997] ICJ Rep. 7

கோட்பாடு தேவைப்படுத்த வேண்டும் என்பதுடன் இயற்கை மூலவளங்களுடன் தொடர்புடைய எந்தவொரு முடிவையும் மேற்கொள்வதற்கு பொதுமக்கள் நம்பிக்கை பொறுப்பு கோட்பாட்டினை பயன்படுத்த வேண்டும் எனவும் தீர்ப்புக்கள் வழங்கப்பட்டன[10].

சுற்றாடல் பாதுகாப்பின் எல்லைகளுக்கு அப்பால், பொது நம்பிக்கைப் பொறுப்புக் கோட்பாட்டின் இலங்கையின் நியாயமான பயன்பாடானது, சுற்றாடலுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல், பரந்தளவில் உள்ளடக்கின்ற அதன் சுய தனித்துவமான வழியைக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. இத்தனித்துவமான நிலைப்பாடானது அரசியலமைப்பின் 3ஆம் மற்றும் 4ஆம் உறுப்புரைகளில் மொழியப்பட்டுள்ள "மக்கள் சக்தி" பற்றிய வரலாற்று ரீதியிலான போதனைகள் மற்றும் அரசியலமைப்புசார் குறித்துறை என்பவற்றால் பெரிதும் தாக்கத்திற்குற்பட்டது எனும் முடிவிற்கு வரக்கூடியதாகவிருக்கின்றது[11].

ஐக்கிய இராச்சியத்தைப் போலல்லாமல், இலங்கையில் இறையாண்மை மக்களிடத்தில் காணப்படுகின்றது[12]. இது பராதீனமானதொன்றும் அரசாங்கத்தின் தத்துவங்கள், அடிப்படை உரிமைகள் மற்றும் வாக்குரிமை என்பவற்றையும் உள்ளடக்கின்றது[13]. இறையாண்மையின் உச்ச அதிகாரமானது சட்டவாக்கம், நிறைவேற்றதிகாரம் மற்றும் நீதித்துறை ஆகிய மூன்று முக்கிய அரச சாதனங்களிடம் உரித்தளிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பிற்கான *19ஆம் சீர்திருத்தம்* குறித்த வழக்கில்[14] ஏனையவற்றிற்கிடையில், இறையாண்மை கொண்ட மக்கள் மீது தத்துவம் தொடர்ந்தும் காணப்படுவதோடு அது தொடர்ந்தும் பேணப்படும் எனவும் மக்களின் பாதுகாவலராக அரசாங்கத்தின் குறிப்பிட்ட உறுப்பின் மூலம் அது பிரயோகிக்கப்படுவதாகவும் தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்த வழக்கு அரச அதிகாரத்திற்கும் பொது நம்பிக்கைப் பொறுப்புக் கோட்பாட்டிற்கும் இடையில் ஒரு வலுவான உறவை உருவாக்கியுள்ளது. அரச அதிகாரத்தின் உண்மையான உரிமையாளர்கள் மக்கள் எனவும் அரசு அவர்களுக்கான நம்பிக்கையில் மாத்திரமே அத்தகைய தத்துவத்தைக் கொண்டுள்ளது எனவும் இது புலப்படுத்துகின்றது.

கோட்பாடு பிரயோகப்படுத்தப்பட்ட தொடக்கத்திலிருந்து, தடையின்றிய அல்லது முழுமையான தற்றுணிபு அதிகாரம் இல்லை என இலங்கை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அரச அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள எவ்வித தற்றுணிபாக இருந்தாலும், அரசியலமைப்பின் 12ஆவது உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்டுள்ளதன் படி சட்டவாட்சியையும் சமத்துவத்திற்கான உரிமையையும் கருத்திற்கொண்டு பிரயோகிக்கப்பட வேண்டும். அத்தகைய அரச அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அரச தத்துவமானது பொது நலனுக்காகவும், பொதுமக்களின் நம்பிக்கைக்கும் மாத்திரம் பிரயோகிக்கப்பட வேண்டும், நியாயமானதாகவும், நல்லெண்ணத்துடனும், பொது அக்கறை சார்ந்த சட்டபூர்வமான மற்றும் பொருத்தமான காரணங்களுக்காகவும் பயன்படுத்தப்பட வேண்டும், தடையற்ற தற்றுணிபு அரச அதிகாரசபையொன்றிற்கு முற்றிலும் பொருத்தமற்றது எனவும் அவை பொது நலனுக்காக மாத்திரம் பிரயோகிக்கப்படுவதற்கான தத்துவங்களைக் கொண்டுள்ளது எனவும் உயர் நீதிமன்றம் மேலும் எடுத்துரைத்துள்ளது[15].

ஆகவே, சுற்றாடல் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு மேலதிகமாக, பொது நம்பிக்கைப் பொறுப்புக் கோட்பாட்டை அரச அதிகாரத்தின் சுரண்டலைக் கட்டுப்படுத்தும் கருவியொன்றாக இலங்கை நீதித்துறை பயன்படுத்தி, அரச அதிகாரிகளின் மூலமான தற்றுணிபினை வரையறைசெய்து, அதன்மூலம் சட்டவாட்சியை நிலைநிறுத்துகின்றது என்பது நன்கு தெளிவாகின்றது.

## பொது நம்பிக்கைப் பொறுப்புக் கோட்பாட்டிற்கும் இலங்கையின் மத்திய வங்கிக்கும் இடையிலான தொடர்பு

இலங்கையில் நிதியியல் முறைமையின் அதியுயர் மட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபையாக மத்திய வங்கியால் பிரயோகிக்கப்படவேண்டிய, புரியப்படவேண்டிய அல்லது நிறைவேற்றப்படவேண்டிய தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை கருத்திற்கொண்டு பொது நம்பிக்கைப் பொறுப்புக் கோட்பாட்டிற்கும் மத்திய வங்கிக்கும் இடையிலான தொடர்பு கண்டறியப்பட வேண்டும். 2022ஆம் ஆண்டில், மத்திய வங்கி உயர் நீதிமன்றத்தின் மீளாய்விற்குட்பட்டது. அரசின் தலைவர், அமைச்சரவை, சனாதிபதியின் செயலாளர் மற்றும் திறைசேரி செயலாளர் உள்ளிட்ட மூத்த அரச அதிகாரிகள், மத்திய வங்கியின் ஒரு சில ஆளுநர்கள், முன்னாள் மத்திய வங்கியின் நாணயச் சபை[16] மற்றும் அதன் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில்

10 வட்டெகெதர விஜெபண்டா எதிர் வனப் பாதுகாப்புப் பணிப்பாளர் மற்றும் ஏனையவர்கள், [2009] 1 SLR p.338;

11 இலங்கை நீதிச் சேவைகள் சங்கச் சட்ட இதழ் - (2016 பதிப்பு -IV) ISSN 2357-2884, பக்கம்.07

12 அரசியலமைப்பின் 3ஆம் மற்றும் 4ஆம் உறுப்புரைகள் மற்றும் 19 வது சீர்திருத்தம் [202] 3 SLR 85 குறித்த வழக்கில் அத்தகைய உறுப்புரைகள் சேர்த்து வாசிக்கப்பட வேண்டுமென உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

13 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் 3ஆம் உறுப்புரை

14 [2002] 3 SLR 97

15 டி சில்வா எதிர் அத்துகோரல 1993 1 S L R 283; https://www.lawnet.gov.lk, 30.03.2025 அன்று அணுகப்பட்டது.

16 இலங்கை மத்திய வங்கிச் சட்டம் சட்டவாக்கஞ்செய்யப்பட்டவுடன், 1949 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தை (திருத்தப்பட்டவாறு) நீக்குவதன் மூலம் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் தொழிற்பாடு நிறுத்தப்பட்டது.

இரண்டு அடிப்படை உரிமை விண்ணப்பங்களைப் பொது நலன் வழக்காக ஒரு சில சமூக ஆர்வலர்கள் தொடுத்தனர். நாணயச் சபை மற்றும் முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர்கள் உள்ளிட்ட பல பதிலிறுப்பாளர்களுக்கு எதிராக வழக்காடலைத்தொடர அனுமதியளிக்கப்பட்டது[17].

இரண்டு வழக்குகளிலும், சமூகத்தின் மீதான பொருளாதார நெருக்கடியின் தாக்கம் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதற்கு வழிவகுத்ததா, அவ்வாறாயின், பதிலிறுப்பாளர்களில் எவரேனுமொருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் மீது ஒப்படைக்கப்பட்டிருந்த பொது நம்பிக்கைப் பொறுப்பின் மீறுகையினால் அரசாங்கத்தின் நிறைவேற்று அத்துடன்/அல்லது நிர்வாக பிரிவுகளில் பதவி வகித்த போது அவர்களது நடவடிக்கைகள் அத்துடன்/அல்லது செயலாற்றாமை காரணமாக ஏற்பட்ட அத்தகைய மீறுகைகளிற்குப் பரிசீலனையிற்கொள்ளப்பட்ட காலகட்டத்தில் அவர்கள் பொறுப்புடையவர்களா என்பதைக் கருத்திற்கொள்ள மனுதாரர்கள் உயர் நீதிமன்றத்தை கோரினார்கள். வரிகளைத் திருத்துவதற்கான தீர்மானங்கள், செலாவணி வீதத்தின் செயற்கைக் கட்டுப்பாடு, அலுவல்சார் ஒதுக்குகளைப் பேண தவறியமையானது ஒதுக்குகளில் ஏற்பட்ட கடுமையான குறைப்பிற்கு வழிவகுத்தல், பன்னாட்டு நாணய நிதியிலிருந்து சரியான நேரத்தில் உதவியினைப் பெறத் தவறியமை மற்றும் வட்டி வீதங்களுக்கான தேவையான சீராக்கங்களை மேற்கொள்ளத் தவறியமை உள்ளடங்கலாக தொடர்புடைய காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் தொடர்களே, நாடு அதன் சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் எதிர்நோக்கிய பொருளாதார பேரழிவிற்கான முக்கிய காரணங்களாக அமைந்தன என மனுதாரர்கள் குற்றஞ்சாட்டினர்.

மேற்கூறிய அடிப்படை உண்மை விண்ணப்பங்களில், நாணயச் சபையின் நடத்தை தொடர்பாக, அதன் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்[18] மற்றும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்கள் இருவர் ஆகியோர் குறித்து உயர் நீதிமன்றம் ஏனையவற்றிற்கிடையில் பின்வருவனவற்றைக் கருத்திற்கொண்டது:

*(i)* பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவியை நாடுதலானது நிலைமையை நிவர்த்தி செய்வதற்கான நம்பகமான வழிநடத்துதலாக இருக்கும் என்பதை வலியுறுத்தி மத்திய வங்கியின் விசேட துணைக் குழுக்கள் மற்றும் அதன் மூத்த அதிகாரிகள் மேற்கொண்ட பரிந்துரைகள் தொடர்பாக நாணயச் சபையினால் காக்கப்பட்ட முழுமையான அமைதி;

*(ii)* மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் தொடர்ச்சியான குறைப்பு மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவியை நாட வேண்டிய கடுமையான தேவை மற்றும் அதற்கமைய அரசாங்கத்திற்கு ஆலோசனையளித்தல் என்பவற்றினை உறுதிப்படுத்தும் அறிக்கைகள் காணப்பட்ட போதிலும் நாணயச் சபையினதும் நியமிக்கப்பட்ட சில உறுப்பினர்களினதும் நடத்தை மற்றும் உறுப்பினர்களால் எந்த ஒருமித்த கருத்தையும் அடைய முடியாது காணப்பட்டமை.

*(iii)* இக்காலப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் நிலவிய நெருக்கடியான சூழ்நிலைகள் குறித்த நாணயச் சபை உறுப்பினர்களின் அறிவு மற்றும்... "ஏனைய மூலங்களிலிருந்து இத்தகைய உட்பாய்ச்சல்களைப் பெற்றுக்கொள்வதற்கான சாத்தியமற்றநிலைமைகள் பற்றியும் அவர்கள் அறிந்திருந்தனர்".

*(iv)* நாணய விதிச் சட்டத்தின் கீழ் இலங்கை ரூபாவின் முகப்புப் பெறுமதி குறித்து நிதி அமைச்சருக்கு பரிந்துரைகளை வழங்குதல், ரூபாவின் சர்வதேச உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கான கடமை**...** மற்றும் அமைச்சருக்கு வெறுமனே காலாந்தர அறிக்கையினை சமர்பிக்காமல், குறித்தச் சட்டத்தின் கீழ் இலங்கை ரூபாவின் சர்வதேச உறுதிப்பாட்டிற்கான சாத்தியமான அச்சுறுத்தல் காணப்படும்போது பொருத்தமான கொள்கைகளையும் மீட்பு வழிமுறைகளையும் பின்பற்றுதல் போன்ற நாணயச் சபைக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள கடமை;

*(v)* செலாவணி வீதத்தை ஐக்கிய அமெரிக்க டொலரொன்றிற்கு ஏறத்தாழ ரூ. 200/- ஆக பேண நிதி அமைச்சும் இலங்கை மத்திய வங்கியும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகள், முக்கியமாக இறக்குமதியாளர்களுக்குப் பயனளித்தன. நாடு பாரிய நெருக்கடியொன்றினை முகங்கொடுத்துக்கொண்டிருந்த போது செலாவணி வீதத்தை ரூ. 192/- ஆக பேணுவதில் நாணயச் சபை/ மத்திய வங்கியின் தொழிற்பாடுகளுடன் எந்தவொரு அதிகாரத்தையும் கொண்டிராத 38ஆவது பதிலிறுப்பாளரின் தலையீடு;

*(vi)* "அனுமதியளிக்கப்பட்டுள்ள அதிகளவிலான நெகிழ்ச்சித்தன்மையைக் கருத்திற்கொண்டு, இலங்கை

17 SC FR 195/2022 மற்றும் SC FR 212/2022

18 மேற்குறிப்பிட்ட அடிப்படை உரிமைகள் விண்ணப்பங்களின் கீழ், நாணயச் சபையின் மூன்று உறுப்பினர்களுக்கு எதிராக மாத்திரமே மேன்முறையீட்டுக்கு அனுமதியளிக்கப்பட்ட அதேவேளை, மத்திய வங்கியின் நாணயச் சபையினால் நியமிக்கப்பட்ட முன்னாள் உறுப்பினர்களான சனாதிபதி சட்டத்தரணி திரு. சஞ்சீவ ஜயவர்தன மற்றும் கலாநிதி ராணி ஜெயமஹா ஆகியோருக்கு எதிராக மேன்முறையீட்டுக்கு அனுமதியளிக்கப்படவில்லை.

மத்திய வங்கியால் தெரிவிக்கப்பட்ட செலாவணி வீதத்திற்கு அப்பால் வர்த்தகங்கள் இடம்பெறக்கூடும்" என நாணயச் சபை 2022.03.08 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் செலாவணி வீதத்தைத் தளம்பலடையச் செய்தபோது, 225 முதல் 364 (வாங்கும் விலை) மற்றும் 229 முதல் 377 (விற்கும் விலை) என்பவற்றிற்கு இடையில் ரூபாவின் சடுதியான பெறுமதித்தேய்வினைத் தூண்டியது என 29 ஆவது பதிலிறுப்பாளர் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் வெளியிட்ட கருத்துக்கள்;

(vii) நியதிச்சட்டத்தால் வழங்கப்பட்ட சாதனங்களில் ஒன்றாக "செலாவணி வீதத்தை" பயன்படுத்துவதற்கான நாணயச் சபையின் இயலாமை மற்றும் செலாவணி வீதம் தார்மீக நடைமுறைகளால் நிர்ணயிக்கப்படுதல் மற்றும் எந்தவொரு கொடுக்கல்வாங்கல்களும் அவ்விகிதத்தில் அரிதாகவே மேற்கொள்ளப்படுவதானது இலங்கை மத்திய வங்கியின் ஒதுக்குக்களை எதிர்மறையான மட்டத்திற்கு இட்டுச்சென்றமை.

மேற்கூறியவற்றைக் கருத்திற்கொண்டு, இவ்வாறான சூழ்நிலைகளில் நாணயச் சபையின் பெரும்பான்மையான உறுப்பினர்களால் பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து உதவியை நாடுவதற்கு அரசாங்கத்திற்கான குறிப்பிட்ட பரிந்துரையொன்றினை வழங்குவதில் தொடர்ந்து தயக்கம் காட்டியமையானது இவ்விக்கட்டான நிலைமையைக் கையாள்வதற்கான ஏதேனும் ஆற்றல் வாய்ந்த மாற்றீடொன்றின்மையின் போது, மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் கடுமையான குறைவின் மத்தியிலும் அத்தகைய தொடர்ச்சியான தடைகளைப் பேணிய கூட்டு அமைப்பாகவிருந்த நாணயச் சபையின் மீதும் தனிப்பட்ட உறுப்பினர்கள் மீதும் அளிக்கப்பட்ட பொது நம்பிக்கைப் பொறுப்பின் மீறுகையாகுமென மேற்கூறிய அடிப்படை உரிமை விண்ணப்பங்களில் தனது தீர்ப்பை உயர் நீதிமன்றம் வெளியிட்டது...

பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவியை நாடுமாறு அரசாங்கத்திற்குப் பரிந்துரைக்கும் நாணயச் சபையின் தீர்மானத்தினை உடனடுத்து, நாணயச் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரான 32ஆவது பதிலிறுப்பாளரின் பதவி விலகலைக் கருத்திற்கொண்டு, ஒருவர் பொது பொறுப்பொன்றினை ஏற்கும் போது, தமது தனிப்பட்ட நம்பிக்கைகளுடன் பிணைந்திருப்பதை விட மக்களின் சிறந்த நலனில் பிரச்சினைகளை புறநிலையாக நோக்கி அவற்றைத் தீர்ப்பதற்கான இயலாற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்... மற்றும் தன்னிச்சையாக செயற்படாத எந்தவொரு முன்மதியுடைய நபரும் நிலைமையினைச் சீர்செய்வதற்குத் துரிதமாக செயற்படத் தவறுவதிலுள்ள கடுமையான விளைவுகளை முன்னரே எதிர்வுகூறியிருப்பார் என உயர் நீதிமன்றம் வலியுறுத்தியது. எனவே, பொதுக் கடப்பாடுகளைக் கொண்டுள்ள நபர்கள் தன்னிச்சையாக செயற்படாமல் உரிய விழிப்புக்கவனத்துடன் செயற்படுவதையும் அவர்களது கடமைகளையும் பொறுப்புக்களையும் நியாயமானளவிலும் தர்க்கரீதியாகவும் நிறைவேற்றுவதை நிச்சயப்படுத்துவது கடமையாகும் என்பதனை மீளவலியுறுத்துவது பொருத்தமானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

2020 ஒத்தோபரில் காணப்பட்ட மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் நிலை, 2021இல் ஒதுக்குகள் நெருக்கடியான மட்டங்களுக்கு வீழ்ச்சியடையும் நிகழ்தகவு, பன்னாட்டு நாணய நிதியத்தின் மூலம் வழங்கப்பட உதவி திட்டத்தின் அனுகூலங்கள் மற்றும் அத்தகைய நிகழ்ச்சித்திட்டமின்மை தொடர்பான ஏனைய நிதியிடல் முகவராண்மைகளின் மனோபாவங்கள் போன்றன பற்றி... 2020.11.11 முதல் நாணயச் சபையில் வழங்கப்பட்ட சபைப் பத்திரத்தையும் சமர்ப்பிப்புக்களையும் பட்டியலிட்டு 2022.04.04 திகதியிட்ட தனது குறிப்பில் முன்னாள் மூத்த துணை ஆளுநரால் சபையின் முன் கொண்டுவரப்பட்ட எந்தவொரு கரிசனையும் கலந்துரையாடலுக்கு உட்படுத்தாத நாணயச் சபையின் செயலாற்றாமை குறித்து உயர் நீதிமன்றம் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியது.

இலங்கை ரூபாவின் முகப்புப் பெறுமதி மற்றும் செலாவணி வீதம் தொடர்பான அத்தியாவசியமான முயற்சிகளை மேற்கொள்ளுதல் மற்றும் சர்வதேச நாணயக் கொள்கையை தீர்மானிக்கும் தத்துவம், இலங்கை ரூபாயின் சர்வதேச உறுதிப்பாட்டினைப் பேணுதல் மற்றும் பன்னாட்டு ஒதுக்குகளின் கடுமையான வீழ்ச்சியினைத் தீர்ப்பதற்கான நிவாரண வழிமுறைகளை மேற்கொள்ளத் தேவையான கொள்கைகளைப் பின்பற்றுதல் போன்ற நாணயச் சபையின் நியதிச்சட்ட கடமையினைக் கருத்திற்கொள்கையில், அது அர்த்தமிக்க வழிமுறைகளை சரியான நேரத்தில் மேற்கொள்ளத் தவறியுள்ளது. எவ்வாறாயினும், வெளிநாட்டு ஒதுக்குகளை வலுப்படுத்துவதில் அல்லது பரிசீலனைக்குட்படுத்தப்பட்டுள்ள காலகட்டத்தில் நாடு கொண்டிருந்த மிகக் குறைந்த வெளிநாட்டு ஒதுக்குகளை பாதுகாப்பதில் அது எதிர்கொண்ட சவால்களுக்கு நாணயச் சபை எந்தவொரு செயலூக்கமான நடவடிக்கையை/ நடவடிக்கைகளையும் மேற்கொண்டதாகப் புலப்படவில்லை என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இது நாணயச் சபையின் வகிபாகம் குறித்த செயலாற்றாமையொன்றாகக் கருத்திற்கொள்ளப்பட்டது. மேலும் இது நாணயச் சபையின் மீது உரித்தளிக்கப்பட்ட பொது நம்பிக்கைப் பொறுப்பின் மீறுகைக்கு வழிவகுத்தது.

மக்களின் இறையாண்மையிலிருந்து வெளிவரும் தத்துவங்களைப் பயன்படுத்தும் அனைத்து அதிகாரிகளுக்கும் பொது நம்பிக்கைப் பொறுப்பு உள்ளார்ந்த பொறுப்பொன்றென உயர் நீதிமன்றம் எடுத்தியம்பியது. எனவே, பொது அதிகாரிகள் என்ற வகையில், பதிலிறுப்பாளர்கள் அனைத்து சந்தர்ப்பங்களிலும், அவர்கள் மீது உரித்தளிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பிற்கு மதிப்பளிக்கின்ற விதத்தில் செயலாற்ற கடமைப்பட்டுள்ளனர். மேலும், ஒட்டுமொத்த நிதியியல் நெருக்கடியின் தொடர்ச்சியான நிகழ்வுகளைக் கருத்திற்கொண்டு, மத்திய வங்கியின் விவகாரங்களில் தலையிட எவ்வித அதிகாரத்தினையும் கொண்டிராத அதிகாரிகளின் கட்டளைகளுக்கு நாணயச் சபை அடிபணிந்ததாக உயர் நீதிமன்றம் *தீர்ப்பிடைக்கூற்றாக* எடுத்துரைத்தது.

ஒட்டுமொத்தத்தில், பொருளாதார நெருக்கடிக்குப் பங்களித்துள்ளதாக இதற்கு முன்னர் அடையாளம் காணப்பட்ட நடவடிக்கைகள், செயலாற்றாமைகள், தீர்மானங்கள் மற்றும் நடத்தைகள் என்பவற்றால் நாணயச் சபை உள்ளிட்ட சில பதிலிறுப்பாளர்கள்[19] அவர்கள் மீது உரித்தளிக்கப்பட்ட பொது நம்பிக்கைப் பொறுப்பினை மீறியுள்ளதாகவும் அரசியலமைப்பின் 12(1)ஆம் உறுப்புரையினால் கட்டளையிடப்பட்ட சட்டத்தின் சமத்துவத்திற்கான உரிமை தொடர்பிலான அடிப்படை உரிமையினை அவர்கள் மீறியுள்ளதாகவும் நாம் கருதுகின்றோம் என உயர் நீதிமன்றம் இறுதியாகப் பெரும்பான்மைத் தீர்ப்பொன்றினை அளித்தது.

மேற்குறிப்பிட்ட உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பானது, தமது நியதிச்சட்ட தத்துவங்களின் பிரயோகம்/பிரயோகமின்மை என்பவற்றின் நடவடிக்கைகள், செயலாற்றாமைகள், அதிகார துஷ்பிரயோகம் அத்துடன்/அல்லது பொதுமக்கள் மீது ஒப்படைக்கப்பட்ட அவர்களின் பொதுக் கடமைகளின் நிறைவேற்றம்/ நிறைவேற்றாமை போன்றவற்றிற்கு இயற்கையாகவோ அல்லது சட்டரீதியாகவோ பொறுப்பாகவுள்ள தரப்பினர், பொது நம்பிக்கைப் பொறுப்புக் கோட்பாட்டை சுற்றாடல் பாதுகாப்பின் அதன் முதனிலைப் பரப்பிற்கு அப்பால் எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதை செம்மையாக விளக்குகின்றது.

எவ்வாறாயினும், மத்திய வங்கியின் தீர்மானங்கள் அல்லது நடவடிக்கைகள் உயர் நீதிமன்றத்தின் முன் சவாலுக்குட்பட்ட முதலாவது நிகழ்வு இதுவல்ல. மத்திய வங்கி அதன் சுயநிர்ணயம், நற்பெயர் மற்றும் ஒருமைப்பாடு என்பவற்றிற்கு பெரும்பாலும் தீங்கிழைக்கும் பல சம்பவங்களுக்கு முகங்கொடுத்தது என்பதை வரலாறு வெளிப்படுத்துகின்றது. சவாலுக்குட்பட்ட எரிபொருள் காப்புக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட்டமை, கிரேக்க அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நாட்டிற்கான முறிகளில் அலுவல்சார் பன்னாட்டு ஒதுக்குகளின் முதலீட்டினை மேற்கொண்டமை, 2015ஆம் ஆண்டில் திறைசேரி முறிகளை சர்ச்சைக்குரிய விதத்தில் வழங்கியமை, ஆற்றலற்ற திட்டங்களில் ஊழியர் சேமலாப நிதியத்தினை முதலீடு செய்தமை என்பன மத்திய வங்கியில் பதவி வகிப்பவர்களினால் மீள மேற்கொள்ளப்படக்கூடாத சில நிகழ்வுகளாகும்.

மேற்கூறிய உயர் நீதிமன்றத் தீர்ப்பானது ஏனைய நீதித்துறை மன்றங்களையும் பொது அமைப்புக்களையும் அரச அதிகாரிகளையும் கண்டறிவதற்கும் பொது நம்பிக்கைப் பொறுப்புக் கோட்பாட்டின் விதிவிலக்கான விதிகள் மற்றும் தரம்குறைந்த மருந்துகளைப் பெறுகை செய்தல், அரச காணிகளை தனிநபர்களுக்குப் பாராதீனப்படுத்தல், சட்டவிரோதமான குடியேற்றத்திற்காகக் காடழித்தல், அரச நிதியங்களின் தவறான கையாடல் போன்ற பல விடயங்களை மீறிய அரசியல்வாதிகளைத் தகுதிவாய்ந்த நீதிமன்றங்களின் முன் கொண்டுவருவதற்கும் வழிவகுத்துள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

### மத்திய வங்கி மீது உரித்தளிக்கப்பட்டுள்ள பொது நம்பிக்கைப் பொறுப்புக் கோட்பாட்டை மீறியதைத் தொடர்ந்து கற்றுக்கொண்ட பாடங்கள்

மேற்கூறிய அடிப்படை உரிமைகள் விண்ணப்பங்களான எஸ்சி எப்ஆர் 195/2022 மற்றும் எஸ்சி எப்ஆர் 212/2022 என்பவற்றில் வழங்கப்பட்ட உயர் நீதிமன்றத் தீர்ப்பானது மத்திய வங்கி அத்துடன்/அல்லது அதன் அலுவலர்களுக்கு எதிராக பல்வேறு அம்சங்களில் அளிக்கப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பொன்றாகும். அதன் கடமைகளின் செயலாற்றலின் போது தெரிவுசெய்யப்பட்ட எந்தவொரு அரசாங்கத்தின் இறை ஆதிக்கத்திற்கும் ஆளாகுதலாகாது என்பதனையும் பொருளாதாரத்தின் நலனிலும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிலும் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை பாதுகாப்பதில் எந்த சுயநிர்ணயத்தினையும் கொண்டிருப்பதில்லை என்பதனையும் அதன் நாணயக் கொள்கையுடன் இசைந்து செல்லாதவிடத்தும் நியதிச்சட்டக் குறிக்கோள்களை உறுதி செய்யும் பொருட்டும் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட நாணய நிதியிடலை குறிப்பிடத்தக்களவு கட்டுப்படுத்தல் வேண்டும் என்பதனையும் மத்திய வங்கி உணர்வதற்கு இது வழிவகுத்தது. மேற்குறிப்பிட்ட நீதித்துறை தீர்ப்பானது, 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டம் இயற்றப்படுவதனை விரைவுபடுத்துவதற்கு

19 2ஆவது பதிலிறுப்பாளர் (மஹிந்த ராஜபக்ஷ), 2அ ஆவது பதிலிறுப்பாளர் (பசில் ராஜபக்ஷ), 29ஆவது பதிலிறுப்பாளர் (அஜித் நிவாட் கப்ரால்), 30 ஆவது பதிலிறுப்பாளர் (பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்), 31ஆவது பதிலிறுப்பாளர் (திரு திரு. எஸ்.ஆர். ஆட்டிகல) மற்றும் 38 ஆவது பதிலிறுப்பாளர் (கலாநிதி.பி.பி.ஜயசுந்தர)

முக்கிய காரணங்களில் ஒன்றாக அமைந்து, அத்தகைய பல கரிசனைகளுக்கு சட்டக் கண்ணோட்டத்தில் செயற்றிறன்வாய்ந்த தீர்வுகளை வழங்கியது.

உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதற்கான முதன்மை குறிக்கோளுடனும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதற்கான ஏனைய நியதிச்சட்டக் குறிக்கோளுடனும் பொறுப்பு ஒப்படைக்கப்படுதல்[20], தாழ்ந்ததும் உறுதியானதுமான பணவீக்கத்தினைப் பேணுவதற்கான புதிய நாணயக் கொள்கைக் கட்டமைப்பினை அறிமுகப்படுத்தல், இறை ஆதிக்கம் தவிர்ந்த அதன் கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கான வலுவான நிதியியல் மற்றும் நிர்வாக சுயாதீனத்தை வழங்குதல்[21], விதிவிலக்கான சூழ்நிலைகள் தவிர அரசாங்கத்திற்கான நாணய நிதியிடலைத் தடைசெய்தல்[22], அரச நிதியங்களின் மூலம் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட கடன் தொழிற்பாடுகள்[23], மத்திய வங்கி மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையிலும் அதிகரித்த வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறுத்தன்மை என இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ், மத்திய வங்கி தனி சட்ட ஆளுமையினைக் கொண்ட அமைப்பொன்றாக மீளெழுச்சியடைந்துள்ளது. பொருளாதாரம், நிதியியல் உறுதிப்பாடு, கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் போன்றவற்றின் நிலைமை தொடர்பில் பல பொது வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு அறிமுகப்படுத்தப்பட்டது[24]. இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியால் பிரயோகிக்கப்படும், நிறைவேற்றப்படும் மற்றும் புரியப்படும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளின் புதிய திட்டத்தை நோக்குகையில், அதன் நியதிச்சட்டக் கடப்பாடுகள் காணப்படுகின்றமைக்கிடையிலும், வங்கியால் அதன் கடமைகளை மேற்கொள்ள முற்றிலும் மாறுபட்ட அணுகுமுறை மேற்கொள்ளப்படாதவிடத்து, மத்திய வங்கி மீண்டும் ஒரு முறை அதன் மீது உரித்தளிக்கப்பட்டுள்ள பொது நம்பிக்கைப் பொறுப்பினை மீறுவதற்கு இடமில்லை என்பதனை அவதானிக்கக்கூடியதாகவிருக்கின்றது.

இலங்கை மத்திய வங்கி நிதியியல் மற்றும் நிர்வாக ரீதியான சுயாதீன அமைப்பு என்ற போதிலும், அது அரசாங்கத்தின் இன்றியமையாத பகுதியொன்றாகக் காணப்படுகின்றது. நிர்வாக மற்றும் நிதியியல் சுயாதீனத்தினைப் பாதுகாப்பதை உறுதிசெய்கின்ற அதேவேளை, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்படுகின்ற அதன் முதன்மை மற்றும் ஏனைய குறிக்கோள்களுக்குப் பாரபட்சமின்றி அரசாங்கத்தின் பொதுப் பொருளாதார கொள்கைக் கட்டமைப்பிற்கு இலங்கை மத்திய வங்கி ஆதரவளித்தல் வேண்டும் என இலங்கை மத்திய வங்கிச் சட்டம் தேவைப்படுத்துகின்றது[25]. உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைதல் மற்றும் பேணுதல் எனும் முதன்மைக் குறிக்கோளைப் பின்பற்றுவதில், மத்திய வங்கி ஏனையவற்றுக்கிடையில், அதன் ஆற்றல்வாய்ந்த மட்டங்களை நோக்கிய வெளியீட்டின் நிலையுறுதிப்பாட்டினை கருத்திற்கொள்ளுதல் வேண்டும். உள்நாட்டு மற்றும் விலை உறுதிப்பாட்டினை அடைவதற்கும் பேணுவதற்கும் மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல், நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார உறுதிப்பாட்டினைக் கருத்திற்கொள்ள மத்திய வங்கியின் மீது மறைமுகமான கடப்பாட்டினை இவ்வேற்பாடுகள் மீண்டும் வழங்குகின்றன எனும் கருத்தைச் சில பொருளியலாளர்கள் வெளிப்படுத்துகின்றனர்[26]. எனவே, மத்திய வங்கி மீது அதன் முதன்மை மற்றும் ஏனைய நியதிச்சட்டக் குறிக்கோள்களின் எல்லைகளுக்கு அப்பால், பொது நம்பிக்கைப் பொறுப்பின் புதிய பரிமாணமொன்றினை ஒப்படைப்பதற்கான சாத்தியப்பாடொன்று காணப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக, தத்துவத் திட்டமிடலின் நோக்கொன்றிலிருந்து, தத்துவங்கள், கடமைகள், பணிகள் குறிப்பாக, இலங்கை மத்திய வங்கி பிரயோகிக்க வேண்டிய தற்றுணிபு எதுவாக இருந்தாலும், தடையின்றியதும் அல்லது முழுமையானதும் அல்ல என்பதையும் அத்தகைய தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் அரசியலமைப்பில் உட்பொதிக்கப்பட்டுள்ள சட்டவாட்சி மற்றும் சமத்துவத்திற்கான உரிமை என்பவற்றை நிலைநிறுத்தி நாட்டிலுள்ள பொதுமக்களின் நலனில் இலங்கை மத்திய வங்கி அவற்றை அவசியமாக

20 மேற்கூறியவற்றிற்கு மேலதிகமாக, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் X ஆம் பாகத்தின் கீழ் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதை குறைநிரப்பு செய்வதற்காக நாட்டின் பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையாக இலங்கை மத்திய வங்கி மீது ஒப்படைக்கப்பட்டுள்ள சில துணை நோக்கங்கள் காணப்படுகின்றன.

21 பொதுவாக, மத்திய வங்கிகள் பொதுமக்களுக்கு குறிப்பிட்ட கடமைகளைச் மேற்கொள்கின்ற சட்டத்தால் ஆணையளிக்கப்பட்ட தனித்தன்மை வாய்ந்த நிறுவனங்கள் ஆகும். மத்திய வங்கிகளின் சுயநிர்ணயம் என்பது 2002 ஆம் ஆண்டில் *சோமபால பட்டிவிதான எதிர் நாணயச் சபை மற்றும் ஏனையவர்கள்* எனும் வழக்கில் இலங்கை உயர் நீதிமன்றத்தினால் மேலோங்கச்செய்யப்பட்ட உலகளாவிய கொள்கையாகும். இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 5 வது பிரிவின் கீழ், மத்திய வங்கியில் நிர்வாக மற்றும் நிதியியல் சுயாதீனம் காணப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், அதன் கடமைகளைப் புரிவதில் தொழில்சார் அபிப்பிராயத்தைத் தவிர வேறு எந்த நபரிடமிருந்தும் எவ்வித அறிவுறுத்தல்களையும் அது நாடுதல் ஆகாது. இது எந்தவொரு நபரினதும் எந்தவொரு செல்வாக்குக்கும் உட்பட்டதாக இருத்தல் ஆகாது எனும் தடையை மேலும் விதித்துள்ளது.

22 இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 86ஆம் பிரிவு

23 இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 87ஆம் பிரிவு

24 இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 80ஆம், 70ஆம் மற்றும் 99ஆம் பிரிவுகள்

25 இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 6ஆம் மற்றும் 104ஆம் பிரிவுகள்

26 கலாநிதி எச் என் தேனுவர இன் கூற்றுப்படி, மத்திய வங்கி சட்டத்தின் சமீபத்திய மாற்றங்கள்... உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினைப் பேணுவதை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளதுடன், மேலும் சாத்தியமான வெளியீட்டைப் பேண வேண்டிய அவசியத்தையும் இது அங்கீகரிக்கிறது. இவை இரண்டினையும் ஒன்றாக சேர்த்து நோக்கும் போது... மத்திய வங்கி பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேண வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்துகின்றது; புதியதோர் இலங்கைக்கான பொருளாதாரக் கொள்கை, கலாநிதி எச் என் தேனுவர, பக்கம். 64

பிரயோகித்தல், நிறைவேற்றல் மற்றும் புரிதல் வேண்டும் என்பதை கருத்திற்கொள்ளுதல் தவிர்க்கமுடியாததொன்றாகும். மத்திய வங்கிகளின் வகிபாகம், மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள், பிரயோகிக்கப்படும் தத்துவங்கள், அத்தகைய வங்கிகளால் புரியப்படும் கடமைகள் என்பன நியாயமானவையாகவும், தன்னிச்சையற்றதாகவும், வெளிப்படையானவையாகவும், பொதுமக்களுக்கான அதன் பொறுப்புக்கூறுத்தன்மையை நிலைநிறுத்துவதாகவும் இருத்தல் வேண்டும் என்பது கருத்தியல் ரீதியாக நிலைநிறுத்தப்படுகின்றது.

இதுவரைகாலமும் நெருக்கடிக்குப் பின்னரான காலப்பகுதியில் மத்திய வங்கி மேற்கொண்ட தீர்மானங்கள், பொருளாதாரம் அதன் மோசமான விளைவுகளிலிருந்து புத்துயிர்பெற்றுக்கொண்டிருப்பதையும், மீட்சியை நோக்கி நகர்வதையும் தெளிவாகக் காண்பிக்கின்றது. இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் உரித்தளிக்கப்பட்டுள்ள பொது நம்பிக்கைப் பொறுப்பினை நிலைநிறுத்தி, அதன் பொதுக் கடமைகளைப் புரிவதற்கு பாதுகாப்பானதொரு சட்ட அரங்கை வழங்குவதன் மூலம் மத்திய வங்கி எதிர்கொள்ளும் இடர்நேர்வுகளைத் தணிப்பதற்குச் சட்டவாக்கம் செயற்றிறன்வாய்ந்த முயற்சியொன்றினை மேற்கொண்டுள்ளது என்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. இத்தகைய சூழ்நிலைகளில், மத்திய வங்கி அதன் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள், மூத்த நிர்வாகம் அல்லது அதன் ஊழியர்கள், தனியாகவோ அல்லது ஒன்றிணைந்தோ, அதன் பொதுக் கடமைகளில் தன்னிச்சையாக, தீங்கிழைக்கும் அத்துடன்/அல்லது நிலைப்பாடற்ற, புறக்கணிக்கும் வகையில் செயற்படாமலிருக்கும் வரை, நீதிமன்றத்திற்கு முன்பாக இலங்கை மத்திய வங்கி தனது நிலைப்பாட்டை வலுவாகக் கொண்டிருப்பதற்கும் அதன் மீது உரித்தளிக்கப்பட்டுள்ள பொது நம்பிக்கைப் பொறுப்பினை அது முறையாக நிலைநிறுத்தியுள்ளதை உறுதிப்படுத்துவதற்கும் ஆற்றல் வாய்ந்த சட்ட மற்றும் அரசியல் சூழலொன்று காணப்படுகின்றது.

## முடிவுரை

பொருளாதார, சமூக மற்றும் அரசியல் அபிவிருத்திகளின் கண்ணோட்டத்தில் இலங்கைக்கு 2024ஆம் ஆண்டு மிகவும் முக்கியமானதொரு ஆண்டாகும். பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆதரவு மற்றும் நெருக்கடியை நிவர்த்தி செய்ய அரசாங்கம் மேற்கொண்ட கொள்கை வழிமுறைகள் போன்றன காரணமாக நாடு அதன் தவணைதவறும் நிலையிலிருந்து விடுபட்டது. அவர்கள் மீது உரித்தளிக்கப்பட்டுள்ள பொது நம்பிக்கைப் பொறுப்பினை ஒருபோதும் மீறாதிருப்பதனை ஒருமனதாகவும் சந்தேகத்திற்கு இடமின்றியும் தேசத்திற்கு உறுதிப்படுத்திய புதிதாக தெரிவுசெய்யப்பட்ட அரசியல் ஆட்சி மற்றும் புதிய நிறைவேற்றுச் சபை என்பவற்றுடன் அவர்களின் புதிய சமூக ஒப்பந்தத்தை நாட்டின் மக்கள் நிறைவேற்றக்கூடியதாகவிருந்தது. ஏனையவற்றிற்கிடையில், அதன் சாத்தியமான மட்டத்தை நோக்கி வெளியீட்டை உறுதிப்படுத்துதல், அரசாங்கத்தின் பொதுப் பொருளாதார கொள்கைக் கட்டமைப்பிற்கு ஆதரவளித்தல் மற்றும் முறைமைசார் இடர்நேர்வு/இடர்நேர்வுகளைத் தவிர்ப்பதற்காக இடைநிலை பேரண்டமுன்மதியுடைய குறிக்கோள்களுடன் இணைந்து நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிசெய்தல் என்பவற்றைக் கருத்திற்கொள்கையில் உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைவதற்கும் பேணுவதற்கும் பொறுப்பாகவுள்ள உச்ச மட்ட நிதியியல் நிறுவனம் என்ற வகையில் மத்திய வங்கியானது நாட்டின் பொது மக்களின் நலனில் முக்கிய வகிபாகமொன்றினைக் கொண்டுள்ளது. இங்குதான் பொது நம்பிக்கைப் பொறுப்புக் கோட்பாடு மத்திய வங்கியின் நோக்கெல்லைக்குள் ஊடுருவுகின்றது.

எனவே, மத்திய வங்கி அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளைப் பிரயோகிக்கும், நிறைவேற்றும் மற்றும் புரியும் போது நியாயமான, வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறக்கூடிய முறையில் செயற்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும் என்பதுடன் பொது மக்களுக்குச் சேவை செய்வதற்காக மத்திய வங்கி தாபிக்கப்பட்டுள்ளது என்பதையும் சட்டவாட்சியின் கோட்பாடுகளை நிலைநிறுத்துவதில் அதன் மீது மறைமுகமாக உரித்தளிக்கப்பட்டுள்ள பொது நம்பிக்கைப் பொறுப்பொன்று காணப்படுகின்றது என்பதையும் மனதிற்கொள்ளுதல் வேண்டும்.

தத்துவத்தின்/தற்றுணிபின் பிரயோகம் குறித்து டிரான் பி.பி. எலீஸ் எதிர் என்.கே. இளங்ககோன், பொலிஸ் மா அதிபர் எனும் வழக்கில், பிரதம நீதியரசர் சிறீபவன் வழங்கிய தீர்ப்பிடைக்கூற்றினை மேற்கோள் காட்டி எழுத்தாளர் இக்கட்டுரையை நிறைவு செய்கின்றார்.

**"அரசு, அரச அதிகாரிகள் மற்றும் பொது அதிகாரசபைகள் என்பவற்றிற்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் முழுமையானவையோ அல்லது தடையின்றியவையோ அல்ல. மாறாக, தவறான நோக்கங்களுக்காகவன்றி பொது நலனுக்காகப் பயன்படுத்தப்படுவதற்காகப் பொதுமக்களுக்காக நம்பிக்கையில் வைத்திருப்பவையாகும்** என தற்போது நன்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது". இத்தற்றுணிபின் பிரயோகமானது 12ஆம் உறுப்புரைக்கும் அத்தகைய தற்றுணிபின் பிரயோகத்தினை ஆளுகின்ற பொதுக் கொள்கைகளுக்கும் உட்பட்டதாகும்." (மேற்கோள் காட்டப்பட்டுள்ளது)[27]

****************

27 SC FR 171/2015; https://www.supremecourt.lk, 06.04.2025 அன்று அணுகப்பட்டது.

# நிலைபெறத்தக்க நிதி பற்றிய நோக்குகள்



**எஸ். எச். ஐ. ராஜகருணா**
மூத்த உதவிப் பணிப்பாளர்
கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்


நிலைபெறத்தக்க நிதி பற்றிய பிரதான நோக்குகளை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது. அண்மைய உலகளாவிய நிலைபெறத்தக்க படுகடன் வழங்கல், காலநிலை இடர்நேர்வுகள் எவ்வாறு நிதியியல் உறுதிப்பாட்டை பாதிக்கின்றன, ஆசியாவின் மாற்றத்திற்கான நிதி பற்றிய குறிப்புக்கள் மற்றும் இலங்கையிலுள்ள நிதியியல் நிறுவனங்களுக்கான பசுமை நிதி போன்றவை தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை இக்கட்டுரை உள்ளடக்குகின்றது. பொருளாதார சுபீட்சத்திற்கு ஆதரவளிக்க நிலைபெறத்தக்க நிதியை நடைமுறைப்படுத்துவதற்கான சகல பிரசைகளினதும் பொறுப்பையும் இக்கட்டுரை வலியுறுத்துகின்றதுது.

## 1. நிலைபெறத்தக்க நிதி என்பது என்ன?

நிதி என்பது சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகைப் பிரச்சினைகள் பற்றிய கூட்டுத் தெரிவுகளை பிரதிபலிக்கின்றது. இருப்பினும், முக்கியமாக அரசாங்கங்கள் இலக்காகக்கொள்கின்ற காலநிலைச் சூழ்நிலையான நிலைபெறத்தக்க பெறுபேறுகளுடன் இணைந்த நிதித்துறைச் சொத்துக்களை காலநிலை தொடர்பான பௌதீக மற்றும் நிலைமாற்ற இடர்நேர்வுகளுக்கு ஆளாகாமல், நிலைபெறத்தக்க விளைவுகளுடன் இணைந்த குறைந்த காபன் தொழில்நுட்பங்களை நோக்கி மீள ஒதுக்கீடு செய்வதை நிலைபெறத்தக்க நிதி என்பது குறிக்கிறது (எஹ்லர்ஸ் மற்றும் ஏனையோர், 2021).

பசுமை நிதி, உயிரியல் பல்வகைமை நிதி, மற்றும் மாற்றத்திற்கான நிதி போன்ற நிலைபெறத்தக்க நிதியின் மூன்று பிரதான வழிகள் காணப்படுகின்றன. பசுமை நிதியிடல் என்பது காலநிலை நடுநிலைச் செயற்பாடுகளை இலக்காகக்கொள்வதுடன், ஒழுங்குவிதிகளானவை பல்வேறுபட்ட செயற்பாடுகள் மற்றும் அவற்றைப் பரிசோதிப்பதற்கான தொழில்நுட்ப தரநியமங்களை குறித்துரைக்கின்றது. உயிரியல் பல்வகைமை நிதி என்பது நிதியங்களைத் திரட்டி முகாமைசெய்வதையும் அதேபோன்று உயிரியல் பல்வகைமை முகாமைத்துவத்தை ஊக்குவித்து நிலைபெறத்தக்கதாக்க நிதியியல் ஊக்குவிப்புக்களைப் பயன்படுத்துவதையும் ஈடுபடுத்துகின்றது. மாற்றத்திற்கான நிதியிடல் என்பது பரிஸ் உடன்படிக்கையின் வெப்பநிலை இலக்கிற்கு இணங்கி, நம்பகமான நிறுவன காலநிலை

**வரைபடம் 1. நிலைபெறத்தக்க நிதியின் முதன்மை வழிகள்**




நிலைமாற்றத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு நிகர பூச்சிய நிலைமாற்றத்தை மேற்கொள்வதற்கு நிறுவனங்களால் அவற்றின் திரட்டப்படும் அல்லது நடைமுறைப்படுத்தப்படும் நிதியிடலைக் குறிக்கின்றது (OECD, 2022).


## 2. உலகலாவிய நிலைபெறத்தக்க படுகடன் வழங்கல்

நிலைபெறத்தக்க கருத்திட்டங்கள் மற்றும் தொடக்க முயற்சிகளுக்கு நிதியளிப்பதில் படுகடன் சந்தை பிரதான வகிபாகத்தைக் கொண்டிருப்பதனால், நிலைபெறத்தக்க நிதியும் உலகளாவிய நிலைபெறத்தக்க படுகடன் வழங்கலும் தொடர்பைக் கொண்டுள்ளன. 2023ஆம் ஆண்டில் ஐரோப்பா, ஆசியா மற்றும் உலகளவில் பசுமை முறிகள் சந்தையில் மிகவும் இயக்கவாற்றல்மிக்க செயற்பாடும் நிலைபெறத்தக்க முறிகளின் அதிகரித்த பயன்பாடும் இருந்ததனை பன்னாட்டு நாணய நிதியத்தின் காலநிலை நிதிக் கண்காணிப்பாளர் எடுத்துக்காட்டுகின்றார். அபிவிருத்தியடைந்த மற்றும் வளர்ந்துவரும் சந்தைகளில் நாட்டிற்கான நிலைபெறத்தக்க முறிகளுக்காக முதலீட்டாளர்களிடையே வலுவான கேள்வி நிலவுகின்றது. 2022 வழங்கல் மட்டங்களுடன் ஒப்பிடும்போது இந்தப் போக்கு தலைகீழ் மாற்றமானது பசுமைமோசடி பற்றிய சந்தை பங்கேற்பாளர்களின் நோக்குகளையும், நிலைபெறத்தக்க இலக்குகளை அடைய நிறுவனங்களை இயக்கும் சொத்து வகுப்பின் நம்பகத்தன்மையையும் பிரதிபலிக்கலாம். இருப்பினும், குறிப்பாக இறையாண்மை என்ற ரீதியில் ஐரோப்பாவும் சீனாவும் மொத்தமாக 56 சதவீதத்திற்கு வகைகூறி பிராந்திய ரீதியிலான ஒதுக்கீடு உறுதியாக இடம்பெற்றிருந்தது (வரைபடங்கள் 1 மற்றும் 2).

**1. சாதன ரீதியிலான உலகளாவிய நிலைபெறத்தக்க படுகடன் வழங்கல்** (ஐ.அ.டொலர் பில்லியன் 2023 மாச்சு 31இல் உள்ளவாறு)





**2. சாதன ரீதியிலான உலகளாவிய நிலைபெறத்தக்க படுகடன் வழங்கல்** (ஐ.அ.டொலர் பில்லியன் 2023 மாச்சு 31இல் உள்ளவாறு)





மூலம்: புளும்பேர்க் நியு எனர்ஜி பைனான்ஸ் மற்றும் பன்னாட்டு நாணய நிதிய ஊழியர் கணிப்புக்கள்

பசுமை முறி வழங்கலில் ஐரோப்பியர்கள் தொடர்ச்சியாக ஆதிக்கம்செலுத்துகின்ற அதேவேளை ஏனைய பிராந்தியங்களில் வழங்கல் மிகவும் குறைவடைந்துள்ளதை வரைபடம் 3 எடுத்துக்காட்டுகின்றது. மேலும், அரசாங்கமும் நிதியியல் நிறுவனங்களும் பசுமை முறி வழங்கலில் தொடர்ந்தும் முன்னிலை வகித்து வருகின்றன.

**3. பிராந்திய ரீதியிலான உலகளாவிய பசுமை முறி வழங்கல்** (ஐ.அ டொலர் பில்லியன் 2023 மாச்சு 31இல் உள்ளவாறு)




**4. உலகளாவிய பசுமை முறி வழங்கல் தொழிற்துறை ரீதியான வகைப்படுத்தல்** (2023 மாச்சு 31இல் உள்ளவாறு சதவீதமாக)





மூலம்: புளும்பேர்க் நியு எனர்ஜி பைனான்ஸ் மற்றும் பன்னாட்டு நாணய நிதிய ஊழியர் கணிப்புக்கள்

## 3. காலநிலை இடர்நேர்வுகள் எவ்வாறு நிதியியல் உறுதிப்பாட்டு இடர்நேர்வுகளாக மாற்றமடைகின்றன?

காலநிலை இடர்நேர்வு நிதியியல் முறைமைகளை நேரடியாகத் தாக்கம்செலுத்துகின்ற அதேவேளை நிலைபெறத்தக்க நிதி அத்தகைய இடர்நேர்வுகளைத் தீர்த்து தணிக்க முயற்சிப்பதால், காலநிலை இடர்நேர்வும் நிலைபெறத்தக்க நிதியும் நெருங்கிய இடைத்தொடர்புகளைக் கொண்டுள்ளன. நிதியியல் முறைமையை பசுமைப்படுத்துவதற்கான வலையமைப்பின் (2019 ஏப்பிறல்) முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி, காலநிலை மாற்றமானது நிதியியல் உறுதிப்பாட்டில் முறைமை முழுவதுமான தாக்கங்களைக் கொண்டிருந்து பௌதீக மற்றும் நிலைமாற்ற இடர்நேர்வுகளை ஏற்படுத்தி பேரண்டப் பொருளாதார நிலைகளை மோசமாக பாதிக்கக்கூடும்.

### 3.1 சாத்தியமான பௌதிக இடர்நேர்வுகளின் தாக்கங்களைப் புரிந்துகொள்ளல்

பௌதிக தாக்கங்கள் என்பது அனல்காற்று, வெள்ளப்பெருக்கு, காட்டுத்தீ, புயல் மற்றும் மண்சரிவு போன்ற அவ்வப்போது ஏற்படும் காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய பாதகமான வானிலை நிகழ்வுகளின் அதிகரிப்பால் ஏற்படும் பொருளாதார செலவுகளையும் நிதியியல் இழப்புக்களையும் குறிக்கின்றன. இவை மழைவீழ்ச்சி விதங்களில் மாற்றங்கள், அதிகரித்த வானிலை வேறுபாடு, கடல் மட்டங்கள் உயர்வடைதல், உயர் சராசரி வெப்பநிலைகள் மற்றும் சமுத்திர அமிலமயமாதல் போன்ற நீண்ட கால, படிப்படியான காலநிலை மாறுதல்களையும் உள்ளடக்குகின்றது.




மூலம்: நிதி முறைமையை பசுமையாக்குவதற்கான வலையமைப்பு 2019


மறுகரத்தில், இழப்புக்கள் காப்புறுதி செய்யப்பட்டிருப்பின் மிக அடிக்கடி ஏற்படுகின்ற மற்றும் கடுமையான வானிலை நிகழ்வுகள் அதிகரித்த கோரிக்கைகள் ஊடாக காப்புறுதிக் கம்பனிகளை நேரடியாக பாதிப்பதுடன் அதிகளவான கட்டுப்பணங்களின் ஊடாக அதன் சேவைநாடிகளையும் மறைமுகமாகப் பாதிக்கின்றது. காப்புறுதி செய்யப்படாத இழப்புக்களின் நிதியியல் சுமை இறுதியில் தனிப்பட்டவர்கள், வியாபாரங்கள் மற்றும் அரசாங்க வரவுசெலவுத்திட்டங்களின் மீது சுமத்தப்படுகின்றது. கடன்களை மீளச்செலுத்துவதற்கான கடன்பெறுநர்களின் இயலாற்றல் மாற்றமடைந்திருப்பின் அல்லது அவர்களின் பிணையுறுதிகளின் பெறுமதி வீழ்ச்சியடைந்திருப்பின் வங்கிகளும் ஏனைய கடன்வழங்குநர்களும் பாரிய கொடுகடன் இடர்நேர்வுகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும். கடன்வழங்குநர்களின் முன்கணிக்கப்பட்ட வருவாய்களில் ஏற்படும் மாற்றத்தால் முதலீட்டாளர்களும் சொத்துரிமையாளர்களும் பாதிக்கப்படுவார்கள். இது நிதியியல் சந்தைகளிலும் பிரதிபலிக்கக்கூடும்.

### 3.2 சாத்தியமான நிலைமாற்ற இடர்நேர்வுகளின் தாக்கங்களைப் புரிந்துகொள்ளல்

நிலைமாற்றத் தாக்கங்கள் என்பது காலநிலை மாற்றத்தை முறியடிக்க “நிகர பூஜ்ஜிய” உமிழ்வுகளை அடைவதை இலக்காகக்கொண்டு குறைந்த காபன் பொருளாதாரத்தை நோக்கி மாறுதலடைவதைக் குறிக்கின்றது. இந்த நிலைமாற்றமானது நிதியியல் சொத்துப் பெறுமதிகளில் செல்வாக்குச்செலுத்தி பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளையும் பாதிக்கும்.

அவசர நடவடிக்கை தேவைப்படுகின்ற அதேவேளை திடீர் நிலைமாற்றமானது நிதியியல் உறுதிப்பாட்டினையும் பரந்த பொருளாதார ஆரோக்கியத்தையும் அச்சுறுத்தக்கூடும். இவ்இடர்நேர்வுகள் மத்திய வங்கிகளின் நாணயக்கொள்கை இலக்குகளுக்கு முக்கியமானவையாகக் காணப்படும் வளர்ச்சி, உற்பத்தித்திறன், பணவீக்கம் மற்றும் வலு விலைகள் போன்ற முக்கிய பேரண்டப் பொருளாதார காரணிகளில் தாக்கம் ஏற்படுத்தலாம்.

பேரண்டப்பொருளாதார மாதிரிகள் பொதுவாக காபன் அல்லது உமிழ்வு இலக்குகளின் சமூக செலவை மதிப்பிடல் போன்ற ஏனைய நோக்கங்களுக்காக வடிவமைக்கப்படுவதனால் பொருளாதார நிலைமாற்ற இழப்பு மதிப்பீடுகளை நிதியியல் இடர்நேர்வுகளாக மாற்றுவது கடினமாகும். இம்மாதிரிகளை நிதியியல் சொத்துப்பட்டியல்களுடன் இணைப்பதற்கு நிறுவனம், பிராந்திய மற்றும் துறை மட்டங்களில் விரிவான வெளியீடுகள் தேவைப்படும்.




*மூலம்:* நிதி முறைமையை பசுமையாக்குவதற்கான வலையமைப்பு 2019

## 4. ஆசியாவில் மாற்றத்திற்கான நிதி

ஆசியா நிலைபெறத்தக்க எதிர்காலமொன்றுக்கு நிலைமாறுதல் உலகளாவிய பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதனால் ஆசியாவில் மாற்றத்திற்கான நிதிக்கான தேவை மிகவும் அதிகமாக அங்கு காணப்படுகின்றது. இந்தப் பிராந்தியம் உலகளாவிய வளர்ச்சியை இயக்கி கடந்த ஆண்டு அதன் சுமார் மூன்றில் இரண்டு பங்கிற்குப் பங்களித்தது. அதேநேரத்தில், பௌதிகம்சார்ந்த காலநிலை இடர்நேர்விற்கு அதிகம் உட்படும் பகுதிகளில் ஒன்றாக ஆசியா விளங்குகின்றது. இந்தப் பிராந்தியத்திற்கான பொருளாதாரப் பெறுமதியில் ஏற்படும் இழப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2050 ஆம் ஆண்டளவில் ஏறத்தாழ 15-20 சதவீதமாக காணப்படும். பொருளாதார வளர்ச்சி, மக்கள்தொகை விரிவாக்கம் மற்றும் அதிகரித்துவரும் நகரமயமாக்கல் காரணமாக அதன் எரிசக்தி தேவை அதிகரித்துள்ளது. ஆசியாவின் 85 சதவீத சக்தி உயிர்ச்சுவட்டு எரிபொருட்களிலிருந்து கிடைக்கின்றது. உலகளாவிய பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தில் ஆசியா 50 சதவீதத்திற்கு வகை கூறியுள்ளதுடன் இதில் மூன்றில் ஒரு பகுதி நிலக்கரி எரியூட்டப்படும் சக்தி நிலையங்களிலிருந்து கிடைக்கின்றது. ஆசியாவில் மின்சார உற்பத்தியில் ஏறத்தாழ 60 சதவீதத்திற்கு நிலக்கரி வகைகூறுகின்றது. மேலும், 2050 ஆம் ஆண்டளவில், இப்பிராந்தியத்தின் எரிசக்தி தேவை இரட்டிப்பிற்கு மேல் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆசியாவின் வளர்ந்துவரும் பொருளாதாரங்கள் மற்றும் அபிவிருத்திடைந்துவரும் நாடுகளின் தணித்தல் மற்றும் ஏற்றதாக்கிக்கொள்ளுதல் தேவைகளைப் பூர்த்திசெய்ய ஆகக்குறைந்தது ஐ.அ.டொ 1.1 ரில்லியன் வருடாந்த முதலீடு தேவைப்படுகின்றது.

பன்னாட்டு நாணய நிதியத்தின் கூற்றுப்படி, குறைந்தபட்சம் ஐ.அ.டொ 800 பில்லியன் காலநிலை நிதியிடல் இடைவெளியை நாடுகள் எதிர்கொள்கின்றன. தூய எரிசக்தி மூலங்களில் உட்கட்டமைப்பு முதலீடு உள்ளடங்கலாக தணித்தல் இடைவெளி ஆண்டுக்கு ஐ.அ.டொ 600 பில்லியன் ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. ஏற்றதாக்கிக்கொள்ளுதல் இடைவெளியானது ஆண்டுக்கு ஏறத்தாழ ஐ.அ.டொ 200 பில்லியனாக காணப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், ஆசியா மற்றும் பசிபிக் நாடுகள் அனைத்து 17 ஐ.நா.சபையின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளில் பின்தங்கி காணப்படுகின்றது. ஆசியா அதன் வளர்ச்சி இலக்குகளை அடைகின்ற அதேவேளை உமிழ்வுகளைக் குறைப்பதற்கு

நிலையான மாறுதலுக்கான புத்தாக்கமிக்க நிதியியல் தீர்வுகள் மற்றும் சாதனங்களைத் துரிதப்படுத்தி அளவினை அதிகரிக்க வேண்டியது அவசியமாகும்.

### 4.1 ஆசியாவில் வெற்றிகரமான மாற்றத்திற்கான நிதிக்கான அடிப்படைகள்


செயற்றிறன்மிக்க நிலைமாற்றமொன்றை அடைவதற்கு நிலைமாற்றம் பற்றிய அனைத்து பரிமாணங்களும் தீர்க்கப்பட வேண்டும். பொருளாதார வளர்ச்சியும் நிலைபெறத்தக்கதன்மையும் சமநிலையாக இருக்க வேண்டும். வினைத்திறனான நிலைமாற்றம் என்பது பசுமைப் பொருளாதாரத்தை வளர்ப்பது மட்டுமல்லாமல், ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தையும் மிகவும் நிலைபெறத்தக்கதாக மாற்றுவது பற்றியதாகும். நிலைபெறத்தக்க தொழில்நுட்பங்கள் மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க எரிசக்தி என்பவற்றில் முதலீடுகள் முக்கியமானவையாக காணப்படுகின்றன. எனினும், அவை உலகளாவிய பொருளாதாரத்தில் 8 சதவீதத்திற்கும் குறைவாகவே விளங்குகின்றன. நிகர பூஜ்ஜிய மற்றும் நிலைபெறத்தக்க உலகினை அடைவதற்கு பொருளாதாரத்தின் அனைத்து துறைகளையும் முன்னேற்றகரமாக மேலும் நிலைபெறத்தக்கதாக மாற்ற வேண்டும். நிலைமாற்றம் எளிமையாக பொருள்படுவது காலநிலை மாற்றத்தை நிவர்த்திசெய்வதற்குத் தேவையான சமூக பொருளாதார மாறுதலை வழங்குகின்ற அதேவேளை மிகவும் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களில் ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்து, நிலைமாற்றத்தின் செலவுகள் மற்றும் நன்மைகள் நியாயமாகப் பரவலடைவதை உறுதிசெய்வதுமாகும். மாற்றத்திற்கான நிதியியல் கட்டமைப்பில் உள்ள இடைவெளிகளும் கட்டாயமாக நிவர்த்திசெய்யப்பட வேண்டும். சிறந்த தரமான தரவு, வெளிப்படுத்தல், வகைப்படுத்தல் மற்றும் நம்பகமான நிலைமாற்றத் திட்டங்கள் என்பன கிடைக்கப்பெறும்தன்மை இருப்பது இதற்குத் துணையாக அமையும். மேலும், சந்தைத் தடைகள் கட்டாயம் நீக்கப்பட வேண்டும். வளர்ந்துவரும் பல பொருளாதாரங்களுக்கு பன்னாட்டு மூலதன சந்தைகளுக்கான அணுகல் பெரும்பாலும் ஒரு பாரிய சவாலாக காணப்படுகின்றது. இறுதியாக, வெற்றிகரமான மாற்றத்திற்கான நிதியிடல் ஒருங்கிணைப்பு, ஒத்துழைப்பு மற்றும் பங்குடைமைகளை வேண்டுகின்றது.

### 4.2 ஆசியாவில் பன்னாட்டு நிலைபெறத்தக்க முறி வழங்கல்

குறிப்பாக ஆசிய பிராந்தியத்தை நோக்கும் போது (வரைபடம் 5) ஆசிய வழங்குநர்களிடமிருந்தான நிலைபெறத்தக்க முறிகளின் பன்னாட்டு வழங்கல் 2021இல் ஏறத்தாழ ஐ.அ.டொ 100 பில்லியனுக்கு அதிகரித்து, பின்னர் 2022 மற்றும் 2023இல் ஏறத்தாழ ஐ.அ.டொ 80 பில்லியனாகக் குறைந்தது. 2015ஆம் ஆண்டு தொடக்கம் பன்னாட்டு நிலைபெறத்தக்க முறிகளை வழங்குவதில் சீன வழங்குநர்கள் முன்னணி இடத்தைப் பிடித்துள்ளனர். அவர்களின் அதிகபட்ச பங்களிப்பு 2016இல் ஏறத்தாழ 47 சதவீதமாகவும், தற்போது 2023இல் 26 சதவீதமாக நிலைபெற்றுவருகின்றது. இதேவேளை, யப்பானும் கொரியாவும் முன்னணி வழங்கல் நாடுகளாக காணப்பட்டன. அவ்விரு நாடுகளும் இணைந்து 2019 மற்றும் 2023 இற்கு இடையில் ஆண்டுரீதியான வழங்கல் அளவில் சராசரியாக 40 சதவீதத்திற்கு பங்களித்தன. யப்பானும் கொரியாவும் முறையே சராசரியாக 13 சதவீதம் மற்றும் 26 சதவீதம் பங்களித்தன. 2023இல் ஹொங்கொங்கிலிருந்து வழங்கல் அளவு ஆண்டுக்கு ஆண்டு இரட்டிப்பாகி கிட்டத்தட்ட ஐ.அ.டொ 16 பில்லியனாக இருந்தது.


வழங்குநர் வகையைப் பொறுத்தமட்டில், நிலைபெறத்தக்க தளத்தில், உருவாகிய வழங்கல் அளவின் காற் பங்கிற்கும் அதிகமானவை வங்கிகளிடமிருந்து ஏறத்தாழ 26 சதவீதமாகவும், அதைத்தொடர்ந்து நாட்டிற்கான வழங்குநர்கள் ஏறத்தாழ 21

ஆசியாவில் பன்னாட்டு நிலைபெறத்தக்க முறி வழங்கல் - தொடர்புடைய நாடுகள் வாரியாக




மூலம்: டியலொஜிக் தரவைப் பயன்படுத்தி பன்னாட்டு மூலதனச் சந்தை அமைப்பு

ஏசியன் ஜி3 நிலைபெறத்தக்க வழங்கலின் துறைவாரியான வகைப்படுத்தல்




மூலம்: பன்னாட்டு மூலதனச் சந்தை அமைப்பு, கொவலென்ட் மூலதனம்

சதவீதமாகவும் இருந்தன. மொத்த வழங்கலை ஒப்பீட்டளவில் பார்க்கும்போது, பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் இரண்டும் மொத்த வழங்கலில் தனிப்பட்ட வகையில் ஏறத்தாழ 20 சதவீதத்தைப் பங்களித்தன. 2023ஆம் ஆண்டில் பொருட்கள், பன்முகப்படுத்தப்பட்டவை, உண்மைச்சொத்து, தகவல் தொழில்நுட்பம் மற்றும் சுகாதாரப் பராமரிப்பு உள்ளிட்ட துறைகளிலிருந்து வரும் மிகவும் பன்முகப்படுத்தப்பட்ட வழங்குநர் வகைகளை ஒட்டுமொத்த சந்தையும் அனுபவித்தது.

## 5. இலங்கையின் நிதியியல் நிறுவனங்களுக்கான பசுமை நிதி

2023ஆம் ஆண்டில், நிலைபெறத்தக்க முதலீடுகளில் முதலீடு செய்யப்படும் தனியார் மூலதனத்தின் அளவை அதிகரிக்கும் ஒட்டுமொத்த நோக்கத்துடன் கொள்கை வகுப்பாளர்களிடையே உரையாடலுக்காக ஐரோப்பிய ஒன்றியத்தால் நிறுவப்பட்ட மன்றமான நிலைபெறத்தக்க நிதிக்கான பன்னாட்டுத் தளத்தின் 20வது உறுப்பினராக இலங்கை அங்கம்வகித்தது.

### 5.1 இலங்கையில் நிலைபெறத்தக்க நிதிக்கான வழிகாட்டல்

நிலைபெறத்தக்க நிதியை அபிவிருத்திசெய்வதற்கான திட்டங்களை இலங்கையின் வழிகாட்டல் எடுத்துரைத்து அவற்றின் நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களில் சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வுகளை முகாமைசெய்தல் பற்றிய வழிகாட்டலை நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்குகின்றது. சுற்றுச்சூழல் ரீதியாக நிலைபெறத்தக்க, காலநிலைக்கு சிநேகமிக்க மற்றும் சமூக ரீதியாக அனைவரையுமுள்ளடக்கிய வியாபாரங்களுக்கான ஆதரவை அதிகரிப்பதை இது நோக்கமாகக்கொள்கின்றது.

**இவ்வழிகாட்டலின் குறிப்பான குறிக்கோள்கள் பின்வருமாறு:**

(1) அமைச்சுக்கள், மத்திய வங்கி, ஏனைய நிதியியல் ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் மற்றும் நிதியியல்துறை பங்கேற்பாளர்கள் மத்தியில் கொள்கை ஒத்திசைவை ஏற்படுத்தி குறிப்பான சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகைப் பிரச்சினைகளைத் தீர்த்தல்.

(2) நிதியியல் நிறுவனங்களின் தாக்குப்பிடிக்கும்தன்மையை மேம்படுத்துதல் மற்றும் செயற்றிறன்வாய்ந்த சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வு முகாமைத்துவத்தின் ஊடாக நிலைபெறத்தக்க விதத்தில் வளர்ச்சியடையவும் விருத்திசெய்யவும் இயலச்செய்தல்.

(3) நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக இலங்கைக்குத் தேவைப்படும் நிதியியல் வளங்களை கிடைக்கச் செய்வதன் மூலம் நிலைபெறத்தக்க முதலீட்டிற்காக தனியார் மூலதனத்தை பெரும்பான்மையாகத் திரட்டுவதற்கான பசுமை/ காலநிலை நிதியியல் தயாரிப்புக்கள் மற்றும் பணிகள் புத்தாக்கங்களை வசதிப்படுத்தல்.

இவ்வழிகாட்டல் இலங்கை மத்திய வங்கியால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களில் கவனம்செலுத்தினாலும் வங்கித்தொழில், மூலதனச் சந்தைகள் மற்றும் காப்புறுதித் துறைகள் உள்ளடங்கலான நிலைபெறத்தக்கதன்மைக்கான பரந்த நிதியியல் சந்தையின் கடமைப்பொறுப்பையும் பிரதிபலிக்கின்றது. ஏனைய நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் சொந்த உபாய நிலைபெறத்தக்க தொடக்க முயற்சிகளை உருவாக்குவதற்கு இவ்வழிகாட்டலைப் பயன்படுத்தலாம்.

### 5.2 இலங்கையின் பசுமை நிதி வகைப்படுத்தல்

நிலைபெறத்தக்க நிதி வழிகாட்டலுடன் இணைந்த வகையில், இலங்கை மத்திய வங்கியானது பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப மற்றும் நிதி ஆதரவுடன் இணைந்து 2022ஆம் ஆண்டில் இலங்கை பசுமை நிதி வகைப்படுத்தலை அறிமுகப்படுத்தியது. வகைப்படுத்தல் என்பது குறித்துரைக்கப்பட்ட தகைமைப் பிரமாணங்களின் அடிப்படையில், முக்கிய நிலைபெறத்தக்க இலக்குகளுக்கு பங்களிக்கும் நடவடிக்கைகள், சொத்துக்கள் மற்றும் வருவாய்ப் பிரிவுகளை அடையாளம்காணும் ஒரு வகைப்படுத்தல் முறைமையாகும். வகைப்படுத்தலைப் பின்பற்றுவதன் மூலம், நிதியியல் துறையானது பசுமை மோசடியைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. காலநிலைத் தணிப்பு, காலநிலை ஏற்றதாக்கிக்கொள்ளுதல் மற்றும் ஏனைய பசுமை குறிக்கோள்கள் எனும் மூன்று முன்னுரிமைத் துறைகளில் இது கவனம்செலுத்துகிறது. வேளாண்மை, கட்டுமானம், சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு, மின்சாரம், எரிவாயு, நீராவி, வளிச்சீராக்கல் சேவை வழங்கல், நீர் வழங்கல், கழிவகற்றல் மற்றும் கழிவு முகாமைத்துவம் உள்ளடங்கலான முன்னுரிமைத் துறைகளையும் வகைப்படுத்தல் எடுத்துக்காட்டுகின்றது.

## 6. ஒவ்வொருவரும் ஆற்ற வேண்டிய வகிபாகம்

மாற்றத்திற்கான நிதியைப் புலப்படுவதற்கான கேள்வியை முதலீட்டாளர்கள் உருவாக்க வேண்டும். இது சாத்தியமான வழங்குநர்களை அதிக வியாபாரங்களுடன் சந்தைக்கு வருவதை ஊக்குவிக்கும். வழங்குநர்கள் பேராவலர்ளுடையவர்களாக இருந்து நிலைபெறத்தக்க படுகடன் ஊடாக மாற்றத்திற்கான நிதியிடலின் வாய்ப்புகளை கண்டறிய வேண்டும். அவர்கள் அறியாமலேயே தகுதியான நிலைபெறத்தக்க சொத்துக்களைக் கொண்ட தொகுதியில் இருக்கலாம்.

மத்திய வங்கிகளுக்கு அரசியலில் ஆலோசகர் வகிபாகம் வழங்கப்பட்டு சந்தை வளர்ச்சிக்கான ஆதாரமளிக்கும் முதலீட்டாளர்களாகக் கருதப்படுகிறன. வெளிப்படையானதும் ஒத்திசைவானதுமான வெளிப்படுத்தல்களுக்கான உலகளாவிய நியமங்களை ஊக்குவிக்கின்ற அதேவேளை நிதியியல் உறுதிப்பாட்டை அதிகரிப்பதற்காக நிலைமாற்ற இடர்நேர்வுப் பகுப்பாய்வுகளை வலுப்படுத்தி நிலைபெறத்தக்க நிதியியல் இடர்நேர்வுகளை முன்மதிமிக்க கட்டமைப்புகளுடன் கூட்டிணைத்தல்.

மாற்றத்திற்கான நிதியியல் வாய்ப்புக்கள் பற்றி சேவைநாடிகளுக்கு அறிவூட்டுவதற்கும் நிறைவேறாத முதலீட்டாளர் கேள்வியைப் பூர்த்திசெய்ய வியாபாரப் பாய்ச்சலை ஊக்குவித்து உருவாக்குவதற்கு சந்தை வசதிப்படுத்துநர்களாக வங்கிகள் இடம்பெறச்செய்யப்படுதல். நிலைபெறத்தக்க நிதியியல் இடையீட்டாளராக அவர்களது புதிய வகிபாகத்திற்கு உயிரோட்டமளித்தல்.

நிலைபெறத்தக்க நிதிக்கான தடைகள், சந்தைத் தடைகள் மற்றும் சந்தை வளர்ச்சிக்குப் பாதகத்தை ஏற்படுத்தும் மிகையான ஒழுங்குமுறைப்படுத்தல் காணப்படவில்லை என ஒழுங்குமுறைப்படுத்துநர்களும் மேற்பார்வையாளர்களும் உறுதிசெய்தல்.

அரசாங்கங்களும் கொள்கைவகுப்பாளர்களும் தேசிய அபிவிருத்தி மற்றும் நிலைமாற்றுத் திட்டங்களை மேலும் நிலைபெறத்தக்கதாக்கி நிதியியல் துறையுடன் மிகவும் நெருக்கமாகப் பணியாற்றுதல். தனியார் மூலதனத்தை ஈர்ப்பதற்கான சிறந்ததொரு நிலைமாற்ற நிர்வாகக் கட்டமைப்பை நிறுவி நிலைமாற்ற இலக்குகளை நிலைபெறத்தக்க உபாயத்துடன் ஒருங்கிணைத்தல்.

**உசாத்துணை**


Carlos B et al; Risk Management for Central Bank Foreign Reserves, ECB, 2004

Dmitry Pevzner, Portfolio Tranching and Currency Composition, The World Bank, 2017,

Gary P. Brinson, CFABrian D. Singer, CFAGilbert L. Beebower, Determinants of Portfolio Performance II: An Update, Financial Analysts Journal Volume 47, Issue 3, 1991 doi.org/10.2469/faj.v47.n3.40

The World Bank Treasury, Inaugural RAMP Survey on the Reserve Management Practices of Central Banks, The World Bank, 2019

The World Bank Treasury, Central Bank Reserve Management Practices, The World Bank, 2020

The World Bank Treasury, Reserve Management Survey Report 2023, The World Bank, 2023

# திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் பிணையுறுதிக் கொள்கை




ஆர். என். டி. ஜயசூரிய,
மூத்த உதவிப் பணிப்பாளர்
சந்தைத் தொழிற்பாடுகள் திணைக்களம்


## 1. பின்னணி

இக்கட்டுரையானது குறிப்பாக, உலகளாவிய நிதியியல் நெருக்கடி மற்றும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று போன்ற முறைமைசார் நிதியியல் இடையூறுகளுக்குப் பதிலிறுக்கும் விதத்திலான மத்திய வங்கியின் நாணயத் தொழிற்பாடுகளினுள் பிணையுறுதிக் கொள்கையின் வளர்ச்சியடைந்து வருகின்ற வகிபாகம் மற்றும் உபாய ரீதியிலான வடிவமைப்பு என்பவற்றினை ஆராய்வதுடன், இது நீண்ட கால திரவத்தன்மை ஏற்பாடு, நிதியியல் சந்தை உறுதிப்பாடு மற்றும் ஐந்தொகைப் பாதுகாப்பு என்பன உள்ளடங்கலாக மரபுசார்ந்த குறுங்கால வட்டி வீதக் கட்டுப்பாட்டிற்கு அப்பால் பரந்தளவிலான கொள்கைக் குறிக்கோள்களிற்கு ஆதரவளிப்பதற்குப் பிணையுறுதிக் கட்டமைப்புக்கள் எவ்வாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளன போன்ற பகுதிகளை உள்ளடக்குகின்றது. முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களினால் மேற்கொள்ளப்பட்ட பன்முக அணுகுமுறைகளைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம், நாணயக் கொள்கை ஊடுகடத்தலினை நிச்சயப்படுத்தல் மற்றும் தளம்பல்மிக்க பொருளாதாரச் சூழல்களில் நிதியியல் உறுதிப்பாட்டினைப் பாதுகாத்தல் என்பவற்றில் இலங்கையின் அனுபவத்தினை ஆராய்வதனை இக்கட்டுரை நோக்காகக் கொண்டுள்ளது.

ஒரு நாட்டின் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகள் மத்திய வங்கியொன்றின் முதன்மைக் நோக்கங்களை அடைவதில் இன்றியமையாதனவாகக் காணப்படுகின்றன. உலகளாவிய நிதியியல் நெருக்கடி மற்றும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட பொருளாதார வீழ்ச்சிக் காலப்பகுதியில், உலகெங்கிலுமுள்ள மத்திய வங்கிகள் பல்வேறு வகையான கொள்கை வழிமுறைகளைப் பின்பற்றி, அவற்றின் ஐந்தொகைகளின் கணிசமானளவிலான விரிவாக்கமொன்றிற்கு வழிவகுத்தது. இச்சூழலில், சீரான சந்தைத் தொழிற்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்கு நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த மற்றும் தாக்குப்பிடிக்கக்கூடிய பிணையுறுதிக் கொள்கைகள் அதிகரித்துச்செல்லும் விதத்தில் முக்கியத்துவமடைந்துள்ளன. இவ்வபிவிருத்திகள் குறிப்பாக, மேம்பட்ட பொருளாதாரங்களில் பிணையுறுதிக் கட்டமைப்புக்களின் முக்கியத்துவம் குறித்த கலந்துரையாடல்களை தீவிரப்படுத்தியுள்ளன.

ஆதலால், திரவத்தன்மை முகாமைத்துவம், நிதியியல் உறுதிப்பாடு, நாணயக் கொள்கையின் ஒட்டுமொத்த செயற்றிறன் மற்றும் மத்திய வங்கிகளின் ஐந்தொகையின் பாதுகாப்பு என்பவற்றில் செல்வாக்குச் செலுத்துகின்ற திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நிறைவேற்றுகையில் பிணையுறுதிக் கொள்கை முக்கிய வகிபாகமொன்றினை ஆற்றுகின்றது. இக்காரணிகளை அடையாளங்கண்டு, பல்வேறு நாடுகளில் உள்ள மத்திய வங்கிகள் தமது திறந்த சந்தைத் தொழிற்பாடுகளிற்கு ஆதரவளிப்பதற்கான தனித்துவமான பிணையுறுதிக் கட்டமைப்புக்களை உருவாக்கியுள்ளமையானது நிதியியல் சந்தைக் கட்டமைப்புக்கள், இடர்நேர்வு ஏற்புக்கள் மற்றும் கொள்கைக் குறிக்கோள்கள் என்பவற்றிலுள்ள வேறுபாடுகளைப் பிரதிபலிக்கின்றது. இணைத்தரப்பினர் தவணை தவறுகையிலிருந்து சாத்தியமான நிதியியல் இழப்புக்களுக்கெதிராக அவற்றின் ஐந்தொகையினைப்

பாதுகாத்தல் மற்றும் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல் மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பவற்றுடன் தொடர்புடைய பரந்தளவிலான துறைகளுக்கு ஆதரவளித்தல் போன்ற இரண்டு முக்கிய குறிக்கோள்களை அடையும் பொருட்டே மத்திய வங்கிகள் அவற்றின் பிணையுறுதிக் கொள்கைகளை முதன்மையாக வடிவமைக்கின்றது. உலகளாவிய நிதியியல் நெருக்கடி மற்றும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று என்பவற்றினால் தூண்டப்பட்ட நிதியியல் சந்தைக் குழப்பநிலைக் காலப்பகுதியில் பிணையுறுதிக் கொள்கையானது முக்கியத்துவம் பெற்று, முன்னைய காலத்திலும் பார்க்க அதிக கவனத்தினை ஈர்த்தது.

உலகளாவிய நிதியியல் நெருக்கடிக்கு முன்னர், அநேகமான முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில் உள்ள மத்திய வங்கிகள் குறுங்கால வட்டி வீதங்களில் கவனம் செலுத்துகின்ற கட்டமைப்பொன்றினுள் முதன்மையாகத் தொழிற்பட்டு, பிணையுறுதிச் சந்தைகளில் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளின் நேரடித் தாக்கத்தினைக் கட்டுப்படுத்தின (பன்னாட்டுத் தீர்வைகளிற்கான வங்கி, 2015). இருப்பினும், உலகளாவிய நிதியியல் நெருக்கடிக்குப் பின்னர், நீண்ட கால வட்டி வீதங்களைச் சேர்க்கும் பொருட்டு மத்திய வங்கிகள் குறுங்கால வட்டி வீதக் கட்டுப்பாட்டிற்கு அப்பால் தமது கொள்கைக் கவனஞ்செலுத்தலினை விரிவுபடுத்தின. அவற்றினது கொள்கைகள் நீண்ட காலக் கடன்வழங்கல் மற்றும் கடன்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் செலாவணி வீதங்களில் செல்வாக்குச் செலுத்துவதற்கான வெளிநாட்டுச் செலாவணித் தலையீடுகள் என்பவற்றினை இலக்காகக் கொள்ளத்தொடங்கின. இதன் விளைவொன்றாக, நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலின் வளர்ச்சியடைந்து வருகின்ற குறிக்கோள்களுடன் சிறப்பாக இசைந்து செல்லும் பொருட்டு பிணையுறுதிக் கொள்கைகளின் வடிவமைப்பு மீளுருவமைக்கப்பட்டது.

## 2. பிணையுறுதிக் கொள்கை மற்றும் அதன் முக்கியத்துவம்

வங்கித்தொழில் முறைமையில் திரவத்தன்மையினைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கி அரச பிணையங்களினைக் கொள்வனவு செய்கின்ற அல்லது விற்பனை செய்கின்ற திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் போன்ற நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு மத்திய வங்கிகள் சந்தைத் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்றன. ஓரிரவு, குறுங்கால அல்லது நீண்ட கால திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் அதேபோன்று ஓரிரவு துணைநில் வசதிகள் என்பவற்றினூடாக திரவத்தன்மையினை உட்செலுத்துகின்ற போது மத்திய வங்கிகள் பிணைகளை வேண்டுகின்றன. அண்மைக்கால பிணையுறுதிக் கட்டமைப்புக்கள் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளின் செயற்றிறன்மிக்க நடைமுறைப்படுத்தல் மற்றும் கொடுப்பனவு முறைமைகளின் சீரான தொழிற்பாட்டை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை இணைத்தரப்பினர் கொடுகடன் இடர்நேர்வினைக் குறைக்கின்ற விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன (Chailloux, Gray மற்றும் McCaughrin, 2008). அதற்கமைய, மத்திய வங்கியொன்று பங்கேற்பாளர்களுக்கு நிதியங்களை வழங்குகின்ற போது, இவ்வகைகளிலான கடன்வழங்கல் கொடுக்கல்வாங்கல்களுடன் இணைந்த தவணை தவறுதல் இடர்நேர்விற்கெதிராக சிலவடிவிலான பிணையங்கள் தேவைப்படுகின்றன. ஆதலால், விதிகள் மற்றும் கோட்பாடுகள் மற்றும் பல வகை சொத்து நியதிகளில் மத்திய வங்கிகளில் வேறுபடுகின்ற பிணையுறுதிக் கட்டமைப்பொன்றினை ஒவ்வொரு மத்திய வங்கியும் கொண்டுள்ளது.

பிணையுறுதிக் கொள்கை என்பது இடர்நேர்வுக்காக சொத்துக்கள் எவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்டு கணிப்பிடப்படுகின்றன அத்துடன் கடன்வழங்கல் கொடுக்கல்வாங்கல்களில் பிணையுறுதியாக எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்பதை ஆளுகின்ற வழிகாட்டல்கள் மற்றும் வதிகளைக் கொண்ட கட்டமைப்பாகும் (Zorn மற்றும் Garcia, 2011). பிணையுறுதி என்பது கடன்வழங்கும் கொடுக்கல்வாங்கல்களுக்கு பிணையாக வாக்குறுதியளிக்கப்பட்ட சொத்துக்கள் குறித்து, கடன்பாட்டாளர் தவணை தவறுகின்ற சந்தர்ப்பத்தில் கடன்வழங்குபவர்கள் மாற்றுவழியைக் கொண்டுள்ளனர் என்பதனை நிச்சயப்படுத்துகின்றது. இது பல்வேறு சொத்து வகைகளுக்கான குறிப்பிட்ட தகைமைப் பிரமாணங்களை ஈடுபடுத்தி, கடன்வழங்குநர் இழப்புக்களைத் தணிக்கத் துணைபுரிகின்றது. மேலும், வாக்குறுதியளிக்கப்பட்ட பிணையத்தினை மீட்டெடுப்பதற்குக் கடன்பாட்டாளர் கடனை மீள்செலுத்த வேண்டிய கடப்பாட்டில் உள்ளார். மத்திய வங்கிகளின் பிணையுறுதிக் கொள்கையானது நாணயக் கொள்கையொன்றின் பகுதியாகக் காணப்படுகின்றது. ஆதலால், மத்திய வங்கிகளில் சிறந்த பிணையுறுதிக் கொள்கையொன்றினைக் கொண்டிருப்பதானது நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல் செயன்முறையுடன் இணைந்த சில முக்கிய இடர்நேர்வுகளைக் குறைக்க முடியும். மேலும், போதியளவிலான பிணையுறுதிக் கொள்கையொன்றின்மையானது மத்திய வங்கிக்குக் குறிப்பிடத்தக்க இடர்நேர்வுகளை உருவாக்குகின்றது. கடன்வழங்கல் கொடுக்கல்வாங்கல்களுடன் இணைந்த கொடுகடன் இடர்நேர்வு மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வு ஆகிய இரண்டினையும் தணிப்பதற்கு பிணையுறுதி இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றது. கடன்வழங்கலிலுள்ள திரவத்தன்மை இடர்நேர்வினை முகாமை செய்வதற்கு, பிணையுறுதிக்கு

உச்சவரம்புகள் பிரயோகிக்கப்படுகின்றன. இருப்பினும், சந்தைப்படுத்தப்படாத பிணையுறுதியினை விற்றுப் பணமாக்குவதற்குப் பல ஆண்டுகள் எடுக்க முடியும். இதற்கமைய, சிறியளவிலானதொரு இழப்பானது மத்திய வங்கியின் ஐந்தொகையில் குறைந்தபட்ச தாக்கமொன்றினை ஏற்படுத்தலாமெனினும், கணிசமானதோர் இழப்பானது அதன் சுயாதீனத்திற்கு அச்சுறுத்தலினை ஏற்படுத்தக்கூடும். மத்திய வங்கியினால் உறப்படும் இழப்புக்கள் நாணயத் தளத்தின் விரிவாக்கமொன்றினை அடிக்கடி தோற்றுவித்து, ஐந்தொகை மீதான கட்டுப்பாட்டினை உள்ளார்ந்தமாகக் குறைக்கின்றன. இவ்விழப்புக்கள் குறிப்பிடத்தக்கதாகக் காணப்படுமாயின், அவை பணவீக்கத்தினைத் தாழ்ந்தளவில் பேணுவதற்கான மத்திய வங்கியின் இயலுமையினைக் குறைவடையச்செய்து, அதன்மூலம் அதன் முதன்மைப் பொருளாதாரக் குறிக்கோள்களை இடையூறிற்குட்படுத்தக்கூடும் (Chailloux, Gray மற்றும் McCaughrin> 2008). மேலும், பிணையுறுதியின் அடிப்படையிலமைந்த கடன்வழங்கலானது எந்நிறுவனங்கள் பங்கேற்க முடியுமென்பதற்கான கட்டுப்பாடுகளை விதித்து, அதன்மூலம் மத்திய வங்கியுடனான அவற்றினது இடைத்தொடர்புகளில் செல்வாக்குச்செலுத்துகின்றது. சந்தைக் கடன்வழங்கலிற்குப் பிணையுறுதியினைத் தேவைப்படுத்தாமல், உயர்ந்தளவிலான நிதியிடல் செலவுகளை எதிர்கொள்கின்ற வங்கிகள் மத்திய வங்கியின் கடன்பாடுகள் மீது பெருமளவு சார்ந்திருப்பதற்கான வாய்ப்பு அதிகளவில் காணப்படும்.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில், உலகெங்கிலுமுள்ள மத்திய வங்கிகள் நாணய மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கும் அவற்றின் சொந்த கடன் தீராற்றலினை நிச்சயப்படுத்துகின்ற வேளையில் பொருளாதாரத்தின் மீட்சிக்கு ஆதரவளிக்கின்ற முன்னெப்பொழுதுமில்லாத வழிமுறைகளை மேற்கொண்டன. இதற்கமைய, நிதியியல் சந்தைகளினுள் திரவத்தன்மையினை உட்செலுத்துவதற்கும் கொடுகடன் பற்றாக்குறைகளைத் தடுப்பதற்கும் கணியம்சார் தளர்த்துகை எனப் பொதுவாக அழைக்கப்பட்ட பாரியளவிலான சொத்துக் கொள்வனவுத் திட்டங்களை அவை நடைமுறைப்படுத்தின. அதில் நிலவிய வட்டி வீதங்கள் பூச்சியத்திற்கு அண்மைய அல்லது சில சந்தர்ப்பங்களில் எதிர்மறை மட்டங்களுக்குக் கூட குறைக்கப்பட்டமையானது நிறுவனங்கள் மற்றும் வீட்டலகுகளிற்கான கடன்பாட்டுச் செலவுகளைக் குறைவடையச்செய்தது. மேலும், வர்த்தக வங்கிகளுக்கு நேரடி ஆதரவினை வழங்குகின்ற மற்றும் முறைமை ரீதியிலான தோல்விகளைத் தடுக்கின்ற நோக்குடன் அவசரகால கடன்வழங்கல் வசதிகளையும் மத்திய வங்கிகள் அறிமுகப்படுத்தின. இறை ஊக்குவிப்பு வழிமுறைகளை வசதிப்படுத்தல், சீரான படுகடன் வழங்கலை நிச்சயப்படுத்தல் மற்றும் நாட்டுக்கான முறிகளில் நம்பிக்கையினைப் பேணுதல் ஆகியவற்றினை மேற்கொள்ளும் பொருட்டு உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் மத்திய வங்கிகளின் மூலமான அரசாங்கங்களுடனான நெருக்கமான ஒருங்கிணைப்பும் அவதானிக்கப்பட்டது. நிதியியல் நிறுவனங்களுக்கு ஒழுங்குமுறைப்படுத்தல் நெகிழ்ச்சித்தன்மையும் வழங்கப்பட்டு, அவற்றுக்கு படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை வழங்குவதனையும் உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய நிதியியல் அதிர்வுகளை உள்ளீர்ப்பதனையும் அனுமதித்தது. ஆகவே, மோசமடைந்த இடர்நேர்வுகள் மற்றும் பொருளாதார நிச்சயமற்றதன்மை என்பவற்றினைப் பொருட்படுத்தாமல், நிதியியல் சந்தைகளை உறுதிநிலைப்படுத்தல், பொருளாதார மீட்சி மற்றும் மத்திய வங்கிகளின் கடன்தீராற்றலினைப் பாதுகாப்பதற்கும் இவ்வழிமுறைகள் பல்வேறு அளவுகளில் துணைபுரிந்தன.

## 3. பல்வேறு மத்திய வங்கிகளின் பிணையுறுதிக் கொள்கை

நிதியியல் சந்தைகளிலுள்ள திரவத்தன்மையானது பொருளாதாரத்தின் வட்டி வீத உறுதிப்பாட்டினைப் பேணுவதில் இன்றியமையாத வகிபாகமொன்றினைக் காட்டுகின்றது. சந்தையில் போதியளவிலான திரவத்தன்மை இல்லாத பட்சத்தில், நாணய மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பேணுகின்ற அதன் முக்கிய குறிக்கோள்களை அடைவதில் மத்திய வங்கி போதியளவிலான திரவத்தன்மையினை வழங்குவது இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. போதியளவிலான மற்றும் நன்கு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட திரவத்தன்மை நிரம்பலொன்று குறுங்கால வட்டி வீதங்கள் இலக்கிடப்பட்ட வீச்சுக்களினுள் தொடர்ந்து காணப்படுவதனை நிச்சயப்படுத்தி, சீரான நாணயக் கொள்கை ஊடுகடத்தலினை வசதிப்படுத்துகின்றது. திரவத்தன்மையின் உகந்தளவிலான மட்டமொன்றினை நிலைபெறச்செய்வதானது பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டிற்கும் நிதியியல் சந்தைகளின் வினைத்திறன்மிக்க தொழிற்பாட்டிற்கும் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. கடன்வழங்கல் வசதிகளை வழங்குகின்றபோது, தவணை தவறுகின்ற பட்சத்தில் ஏற்படக்கூடிய சாத்தியமான இழப்புக்களைப் போதியளவு ஈடுசெய்யும் பொருட்டு மத்திய வங்கிகள் பொருத்தமான பிணையுறுதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தமது பிணையுறுதிக் கொள்கையினை வடிவமைக்கின்ற போது மத்திய வங்கிகள் இரண்டு முக்கிய துறைகளைக் கருத்திற்கொள்ள வேண்டும். முதலாவதாக, மத்திய வங்கி செயற்றிறன்மிக்க நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலை இயலச்செய்வதற்குப் போதியளவு நெகிழ்ச்சித்தன்மையாயிருக்க

வேண்டும். பிணையுறுதியாக வங்கிகளின் உயர்தரமிக்க சொத்துக்கள் வாக்குறுதியளிக்கப்படுகின்றன என்பதை கொள்கை உறுதிசெய்து, அதனூடாக இணைத்தரப்பு வங்கி இடர்நேர்விற்கான மத்திய வங்கியின் கடனளவைக் குறைக்க வேண்டும். மத்திய வங்கிகளின் பிணையுறுதிக் கொள்கையானது உலகளாவிய நிதியியல் நெருக்கடி மற்றும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியிலிருந்து பாரியளவில் கலந்துரையாடப்பட்டு வருவதுடன் இதன்விளைவொன்றாக, மத்திய வங்கிகளினால் பிணையுறுதிப்படுத்தப்பட்ட கடன்வழங்கலுடன் தொடர்புடைய உச்சவரம்புகள் (எல்லைகள்) விரிவாகப் பயன்படுத்தப்படுகின்றன.

ஆரம்பத்தில், சந்தைக்குத் திரவத்தன்மையினை வழங்குகின்றபோது கழிவுசெய்யப்பட்ட குறுங்கால வர்த்தக உண்டியல்களை மத்திய வங்கிகள் பிணையுறுதியாகப் பயன்படுத்தின. அக்காலத்தில், பிணையுறுதியாகப் பயன்படுத்தப்பட முடியுமான மாற்றுச் சாதனங்கள் ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்பட்டதுடன் மறுபுறம் நிதியியல் சந்தைகளும் அதிகளவு அபிவிருத்தியடைந்திருக்கவில்லை. மேலும், "உண்மை உண்டியல் கோட்பாடானது" கொடுகடன் இடர்நேர்விற்கு எதிரான பாதுகாப்பாகவும் பயன்படுத்தப்பட்டது. உண்மை உண்டியல் கோட்பாடென்பது குறுங்கால படுகடன் சாதனத்திற்கான நாணயமானது பொதுவாக கழிவில், பரிவர்த்தனையின் போது கழிவொன்றில் வழங்கப்படுகின்ற விதிமுறையொன்றினைக் குறிக்கின்றது. மேலும், உண்மை உண்டியல் கோட்பாடானது சம அளவில் மதிப்பிடப்பட்ட சொத்துக்களினால் போதுமானளவு உத்தரவாதப்படுகின்ற பணத்தினை மட்டுமே அல்லது முதன்மையாக வழங்குகின்ற வங்கிகளிற்கு மட்டுப்படுத்துவதானது பணவீக்கத்திற்குப் பங்களிக்காது. இருப்பினும், உலகளாவிய நிதியியல் நெருக்கடிக் காலப்பகுதியில் வலியுறுத்தப்பட்ட பிணையுறுதிக் கொள்கைசார் நடைமுறைகள் மற்றும் முக்கியத்துவம் என்பன செயற்திறன்மிக்க நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல் குறித்து முக்கியமாகக் கவனம்செலுத்தியது.

Bindseil மற்றும் Papadia (2006) இருவரும் தகைமையுடைய பிணையுறுதியின் விரும்பத்தக்க சிறப்பியல்புகள், இடர்நேர்வுத் தணிப்பு உத்திகள் மற்றும் பிணையுறுதிக் கட்டமைப்பினைக் கண்காணித்தல் ஆகியவற்றினை உள்ளடக்கின்ற வெவ்வேறு கட்டங்களிலான மத்திய வங்கியின் பிணையுறுதிக் கொள்கையொன்றின் வடிவமைப்பினைச் சுருக்கமாகக் கூறுகின்றனர். இதற்கமைய, மத்திய வங்கித் தொழிற்பாடுகளுடன் இணைந்த இடர்நேர்வுகளைத் தணிக்கும் பொருட்டு பல்வேறு வகைகளிலான பிணையுறுதிகளின் தேவைப்பாடானது முக்கியமானதொன்றாகக் காணப்படுகின்றது. மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிணையுறுதியானது சட்டபூர்வ உறுதித்தன்மை, கொடுகடன் தரம் மற்றும் கொடுகடன் மதிப்பீட்டின் எளிதான கிடைப்பனவு, எளிதான விலையிடல் மற்றும் திரவத்தன்மை, செலவுகளைக் கையாளுதல் மற்றும் கிடைப்பனவாகவுள்ள தொகைகள் மற்றும் எதிர்கால வாய்ப்புக்களின் பயன்பாடு போன்ற பல்வேறு வகையிலான குணவியல்புகள் காணப்பட வேண்டுமென்பதை அவர்கள் எடுத்துரைத்துள்ளனர். ஏதேனும் மத்திய வங்கிக்குப் பிணையுறுதிக் கட்டமைப்பொன்றினை வடிவமைக்கும்போது இவ்வகைகளிலான குணவியல்புகள் அத்தியாவசியமாகக் காணப்படுகின்றன.

அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளிலும் பார்க்க அபிவிருத்தியடைந்த நாடுகளின் நிதியியல் சந்தைகள் நன்கு வளர்ச்சியடைந்திருப்பதனால் அவை பல்வேறு வகையான பிணையுறுதிகளைப் பயன்படுத்துகின்றன. பல்வேறு வகையான பிணையுறுதிகள் வெவ்வேறு அளவுகளிலான இடர்நேர்வுகளைக் கொண்டுள்ளமையினால் மேலதிக இடர்நேர்வுத் தணிப்பு உபாயங்களும் மத்திய வங்கிக்கு இன்றியமையாதனவாகக் காணப்படுகின்றன. ஆதலால், மதிப்பீடு மற்றும் கணக்கு எல்லைக் கோரல்கள், வரையறைகள், உச்சவரம்புகள் மற்றும் மீள்நிரப்புதல்சார் நடைமுறைகள் போன்ற இடர்நேர்வுத் தணிப்பு வழிமுறைகளும் பிணையுறுதி வகைக்கமைய வேறுபடுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றன. மத்திய வங்கிகளின் மூலமான தமது இணைத்தரப்பினரிற்கான கடன்வழங்கலுடன் இணைந்த இடர்நேர்வுகளைத் தணிக்கும் பொருட்டு பிணையங்களை விலையிடுகின்ற போது மத்திய வங்கிகள் பல உச்சவரம்புக் கொள்கைகளைப் பின்பற்றுகின்றன.

இருப்பினும், வேறுபட்ட மத்திய வங்கிகளில் உள்ள பிணையுறுதிக் கட்டமைப்புக்கள் அவற்றின் தற்போதைய கட்டமைப்புக்களை அவை மீள்வடிவமைக்கின்றபோது பல்வேறு அம்சங்களில் அவற்றின் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுகின்றன. இதற்கமைய, நியூயோர்க்கின் பெடரல் ரிசேர்வ் வங்கியானது சந்தை நடுநிலைமையினை நோக்காகக் கொண்டுள்ளது. பெடரல் ரிசேர்வ் வங்கியின் குறுங்கால திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ், பிணையுறுதித் தொகுப்பானது சுருக்கமாக வரையறுக்கப்பட்டுள்ளதுடன் தொழிற்பாடுகள் சந்தையுடன் தொடர்புடைய வீதங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. அதேவேளை, யூரோ முறைமையானது சந்தை நடுநிலைமையிலும் பார்க்க இணைத்தரப்பினரின் நடுநிலைமைக்குப் பாரியளவிலான முக்கியத்துவத்தினை அளிப்பதுடன் தொழிற்பாடுகளுக்கான

அணுகல் மிகவும் பரந்தளவிலான இணைத்தரப்பினருக்குத் திறந்திருக்கின்றதொரு விதத்தில் அதன் தகைமையுடைய பிணையுறுதித் தொகுப்பினை வரையறைசெய்கின்றது. பங்கேற்பாளர்களுக்கு கடன்வழங்குகின்ற போது, ஐரோப்பிய மத்திய வங்கி இணைத்தரப்புசார் இடர்நேர்வினைத் தணிக்கும் பொருட்டு பிணையுறுதியைத் தேவைப்படுத்துகின்றது. யூரோவில் குறித்துரைக்கப்பட்ட முறிகள் மாத்திரமே பிணையுறுதியாகத் தகைமையடைகின்றன. இப்பிணையுறுதியானது மதிப்பீட்டு உச்சவரம்புகளிற்கு உட்பட்டதாகக் காணப்படுகின்றது.

தகைமையுடைய பிணை குறித்த யப்பான் வங்கியின் வழிகாட்டுதல்கள் அதன் ஐந்தொகையின் ஆற்றல்வாய்ந்ததன்மையைப் பேணுதல் மற்றும் தொழிற்பாட்டு வினைத்திறனை உறுதிசெய்தல் என்பவற்றினை முன்னிலைப்படுத்துகின்றன. அதன் "சம வாய்ப்புக்களை வழங்குகின்ற மற்றும் நியாயமான முறையில் நடாத்துகின்ற" முறையானது அதனை ஐரோப்பிய மத்திய வங்கிக்கு நிகரான முறையில் தொழிற்படுவதனை நிச்சயப்படுத்துகின்றதுடன் அதனைப்போன்றே உள்நாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட சொத்துக்களிற்கு வரையறைகளை விதிக்கின்றது. இங்கிலாந்து வங்கி, திரவத்தன்மை மற்றும் கொடுகடன் இடர்நேர்வு என்பன குறித்துக் கவனம்செலுத்துவதுடன், திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் வசதி ஆகிய இரண்டையும் பயன்படுத்துவதில் உயர்ந்தளவிலான கொடுகடன் தரத்திலான பிணையுறுதியினைத் தேவைப்படுகின்றது. பின்வரும் அட்டவணை பல்வேறு மத்திய வங்கிகளினால் பயன்படுத்தப்படுகின்ற வேறுபட்ட பிணையுறுதிகளை எடுத்துக்காட்டுகின்றது.

**அட்டவணை 1: பல்வேறு மத்திய வங்கிகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிணையுறுதிகள்**

| நாடு | தகைமையுடைய பிணையுறுதிகள் | |
|---|---|---|
| | திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் | துணைநில் வசதி |
| ஐரோப்பிய மத்திய வங்கி | மத்திய அரச பிணையங்கள், பிணையளிக்கப்படாத வங்கி முறிகள், கம்பனி முறிகள், பிராந்திய அரச பிணையங்கள், காப்பீடு செய்யப்பட்ட வங்கிப் பிணையங்கள், சொத்தினால் பிணையிடப்பட்ட பிணையங்கள், சந்தைப்படுத்த முடியாத சொத்துக்கள் (கொடுகடன் கோரல்கள், நிலையான வைப்புக்கள், காசு) | மத்திய அரச பிணையங்கள், பிணையமல்லாத வங்கி முறிகள், கம்பனி முறிகள், பிராந்திய அரச பிணையங்கள், காப்பீடு செய்யப்பட்ட வங்கிப் பிணையங்கள், சொத்தினால் பிணையிடப்பட்ட பிணையங்கள், சந்தைப்படுத்த முடியாத சொத்துக்கள் (கொடுகடன் கோரல்கள், நிலையான வைப்புக்கள், காசு) |
| அவுஸ்திரேலியா | அவுஸ்திரேலிய அரச பிணையங்கள், வங்கி மற்றும் வங்கியல்லா பிணையங்கள், சொத்தினால் பிணையிடப்பட்ட பிணையங்கள், வெளிநாட்டுப் பிணையங்கள், முறிகள், பணச் சந்தைச் சாதனங்கள் | அவுஸ்திரேலிய அரச பிணையங்கள், வங்கி மற்றும் வங்கியல்லா பிணையங்கள், சொத்தினால் பிணையிடப்பட்ட பிணையங்கள், வெளிநாட்டுப் பிணையங்கள், முறிகள், பணச் சந்தைச் சாதனங்கள் |
| கனடா | கனேடிய டொலர் சொத்துக்கள் | கனேடிய டொலர்களில் குறித்துரைக்கப்பட்டு நேரடியாக வழங்கப்பட்ட கனேடிய அரச சந்தைப்படுத்தக்கூடிய பிணையங்கள் |
| சீனா | உயர் தரத்திலான பிணையங்கள் மற்றும் கடன்கள் | அரச முறிகள், மத்திய வங்கி உண்டியல்கள், கொள்கை வங்கி முறிகள், அரசினால் நிதியுதவியளிக்கப்பட்ட முறிகள், ஏனைய உயர் தரத்திலான முறிகள் |
| யப்பான் | அரச முறிகள், திறைசேரிக் கழிவு உண்டியல்கள், அரசினால் உத்தரவாதமளிக்கப்பட்ட முறிகள், மாநகரசபை முறிகள், கம்பனி முறிகள் | அரச முறிகள், திறைசேரிக் கழிவு உண்டியல்கள், அரசினால் உத்தரவாதமளிக்கப்பட்ட முறிகள், மாநகரசபை முறிகள், கம்பனி முறிகள் |

| | | |
|---|---|---|
| மலேசியா | மலேசிய அரசு மற்றும் மலேசிய நெகாரா வங்கியினால் வழங்கப்பட்ட றிங்கிற்றில் குறித்துரைக்கப்பட்ட பிணையங்கள், குறைந்தபட்சம் A3 அல்லது A- உள்நாட்டுத் தரமிடல்களுடனான தேர்ந்தெடுக்கப்பட்ட கம்பனி முறிகள் மற்றும் சுகுக் | றிங்கிற்றில் குறித்துரைக்கப்பட்ட பிணையங்கள் (மலேசிய அரச பிணையங்கள், வங்கியினால் வழங்கப்பட்ட பிணையங்கள், கிழக்காசிய பசிபிக் மத்திய வங்கிகளின் நிறைவேற்றுக் கூட்ட உறுப்பினர் அரச பிணையங்கள், கம்பனி முறிகள், குறைந்தபட்ச தரமிடல்களுடனான சுகுக், வங்கியாளர்களின் ஏற்புக்கள், உரிமம்பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட வைப்புத்தொகைகளின் கைமாற்றத்தக்க சாதனம் போன்றவை), றிங்கிற்றில் குறித்துரைக்கப்படாத பிணையங்கள் (ஐக்கிய அமெரிக்க திறைசேரிப் பிணையங்கள், ஐக்கிய இராச்சிய கில்ட்ஸ், பல்புடை நிறுவனங்களினால் வழங்கப்பட்ட பிணையங்கள் போன்றவை) |
| சிங்கப்பூர் | சிங்கப்பூர் அரச பிணையங்கள், வெளிநாட்டுச் செலாவணிப் பரஸ்பர பரிமாற்றல் (ஐக்கிய அமெரிக்க டொலர்கள்) | சிங்கப்பூர் அரச பிணையங்கள், சிங்கப்பூர் நாணய அதகாரசபை உண்டியல்கள், சிங்கப்பூர் டொலர்களிலான படுகடன் பிணையங்கள் |
| தாய்லாந்து | அரச உண்டியல்கள் மற்றும் முறிகள், அரசினால் உத்தரவாதமளிக்கப்பட்ட அரச தொழில்முயற்சி முறிகள் அல்லது AAA தரமிடல்களுடனான அரச தொழில்முயற்சி முறிகள், மத்திய வங்கி உண்டியல்கள் மற்றும் முறிகள் | அரச உண்டியல்கள் மற்றும் முறிகள், அரசினால் உத்தரவாதமளிக்கப்பட்ட அரச தொழில்முயற்சி முறிகள் அல்லது AAA தரமிடல்களுடனான அரச தொழில்முயற்சி முறிகள், மத்திய வங்கி உண்டியல்கள் மற்றும் முறிகள், ஐ.அ.டொலர், எல்லைகளுக்கிடையிலான பிணையுறுதி ஏற்பாட்டில் தாய்லாந்து வங்கியுடன் கையெழுத்திட்டுள்ள நாடுகளின் அரசாங்கங்கள் மற்றும் மத்திய வங்கிகளினால் வழங்கப்பட்ட பிணையங்கள் |
| இந்தோனேசியா (மரபுசார்ந்த) | இந்தோனேசிய வங்கிச் சான்றிதழ்கள், இந்தோனேசிய வங்கி வைப்புச் சான்றிதழ்கள், இந்தோனேசிய வங்கி ருப்பியா பிணையங்கள், சுகுக் வங்கி இந்தோனேசியா, நாட்டிற்கான முறிகள், சூரத் பெர்ஹார்கா நெகாரா | இந்தோனேசிய வங்கிச் சான்றிதழ்கள், இந்தோனேசிய வங்கி வைப்புச் சான்றிதழ்கள், சுகுக் வங்கி இந்தோனேசியா, சூரத் பெர்ஹார்கா நெகாரா, நாட்டிற்கான முறிகள் |
| இந்தியா | மத்திய மற்றும் மாநில அரச பிணையங்கள் | மாநில அரச பிணையங்கள் உட்பட அரச பிணையங்கள் |

*மூலம்:* ஒவ்வொரு மத்திய வங்கியினதும் இணையத்தளங்கள்

### 4. பிணையுறுதிக் கட்டமைப்பில் இலங்கையின் அனுபவம்

இலங்கை மத்திய வங்கி 2015 இலிருந்து அதன் நாணயக் கொள்கைக் கட்டமைப்பின் நவீனமயமாக்கலினைத் தொடங்கியதுடன் 2020இல் நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பொன்றினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியதன் பின்னர் 2024 நவெம்பரில் ஒற்றைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறையொன்றிற்கு மாறுதலடைந்தது. ஏனைய மத்திய வங்கிகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை மத்திய வங்கியும் அதன் நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதில் இதனையொத்த செயன்முறையொன்றினைப் பின்பற்றுகின்றது. நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளின் தற்போதைய முறைமையின் முக்கிய நாணயக் கொள்கைக் கருவியானது ஓரிரவுக் கொள்கை வீதத்தினை உள்ளடக்குகின்றது. திறந்த சந்தைத் தொழிற்பாடுகள், துணைநில் வசதி மற்றும் நியதி ஒதுக்குத் தேவைப்பாடு என்பன இலங்கை மத்திய வங்கி உள்நாட்டுப் பணச் சந்தைத் திரவத்தன்மையினை முகாமைத்துவம் செய்வதற்குப் பயன்படுத்துகின்ற ஏனைய நாணயக் கொள்கைக் கருவிகளாகக் காணப்படுகின்றன. ஓரிரவு வட்டி வீதங்களை ஓரிரவுக் கொள்கை வீதத்தில் அல்லது அதனை அண்மித்த மட்டங்களில் பேணுவதற்குத் திறந்த சந்தைத் தொழிற்பாட்டு

ஏலங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதற்கமைய, மிதமிஞ்சிய திரவத்தன்மை நிலைமையொன்றில், மீள்கொள்வனவு ஏலங்கள் போன்ற ஓரிரவுக் கொள்கை வீதச் சாதனங்களிலிருந்தான கீழ்நோக்கிய அழுத்தத்தினை எதிர்கொள்கின்ற ஓரிரவு வீதங்கள் மிதமிஞ்சிய திரவத்தன்மையினை உள்ளீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. அதேபோன்று, குறிப்பாக பற்றாக்குறைமிக்க திரவத்தன்மை நிலைமையில், ஓரிரவு வீதங்கள் மீதான மேல்நோக்கிய அழுத்தத்தினை நிவர்த்திசெய்வதற்கு நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் நடத்தப்படுகின்றன. மேலும், திறந்த சந்தைத் தொழிற்பாட்டு ஏலங்களின் ஊடாக அல்லது சந்தையின் ஊடாக நிறைவேற்றப்படாத ஏதேனும் எஞ்சிய தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்குப் பங்கேற்பாளர்களுக்குத் துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் ஆகியவற்றில் துணைநில் வசதிகள் வழங்கப்படுகின்றன.

இலங்கை மத்திய வங்கியின் தற்போதைய பிணையுறுதிக் கொள்கையின் பிரகாரம், அரச பிணையங்கள் (திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள்) மாத்திரமே திறந்த சந்தைத் தொழிற்பாடுகளிற்கும் துணைநில் கடன்வழங்கல் வசதிக்கும் பிணையுறுதியாயமைவதற்குத் தகைமையினைக் கொண்டுள்ளன. இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகளின் கீழான பிணையுறுதிகளாக உறுதியளிக்கப்பட்ட இத்தகைய பிணையங்கள் வசதியின் காலப்பகுதி மற்றும் பிணையுறுதியின் மீதமுள்ள முதிர்ச்சிக் காலம் ஆகியவற்றின் அடிப்படையில் உச்சவரம்பிற்கு உட்பட்டவையாகக் காணப்படுவதுடன் தொடர்புடைய விளைவு வீதங்கள் ஒவ்வொரு பன்னாட்டுப் பிணைய அடையாள இலக்கத்திற்கும் கணக்கிடப்படுகின்றன. மேலும், உறுதியளிக்கப்பட்ட பிணையங்களின் முதிர்ச்சியானது அவை பிணையுறுதியாகப் பயன்படுத்தப்படுகின்ற தொழிற்பாட்டின் காலப்பகுதியிலும் பார்க்க விஞ்சிக் காணப்பட வேண்டும்.

மேலும், உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கி அதன் பிணையுறுதித் தளத்தினை விரிவுபடுத்துவதன் மூலம் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அவசரக் கடன் மற்றும் முற்பணங்களை வழங்குதல் குறித்த தற்போதைய பொறிமுறையினை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொண்டது. வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட இலங்கை அரச பிணையங்கள், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் ரூபாவில் குறித்துரைக்கப்பட்டு விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட பொதுப் பங்குகள், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட ரூபாவில் குறித்துரைக்கப்பட்டு விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட பொது கம்பனி முறிகள், வதிவிட அசையாச் சொத்தின் மீதான ஈடுகள் மூலம் பெறப்பட்ட கடன்கள், கம்பனி அசையாச் சொத்தின் மீதான ஈடுகள் மூலம் பெறப்பட்ட கடன்கள், அடகுபிடித்தல் முற்பணங்கள், வாகனக் கடன்கள்/குத்தகைகள், உரிமம்பெற்ற வங்கிகளின் நிலம் மற்றும் கட்டிடங்கள் ஆகியவற்றினை இது உள்ளடக்கியது. இருப்பினும், திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி என்பவற்றின் கிரமமான தொழிற்பாடுகளுக்கு இச்சாதனங்கள் தற்போது தகுதியற்றவையாகக் காணப்படுகின்றன.

இலங்கையில் தற்போதுள்ள பிணையுறுதிக் கட்டமைப்பினைக் கருத்திற்கொண்டு, புதிய சாதனங்களை உட்படுத்தல், பிணையுறுதி மற்றும் குணாதிசயங்களின் அடிப்படையில் இடர்நேர்வுகளின் அடிப்படையிலமைந்த உச்சவரம்புகளை அறிமுகப்படுத்தல், பிணையுறுதி முன்நிலைப்படுத்துகின்ற நடைமுறைகள் போன்றவற்றின் மூலம் இலங்கை மத்திய வங்கியின் பிணையுறுதிக் கொள்கையை மேலும் மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறொன்று காணப்படுகின்றது. வெளிநாட்டுச் செலாவணிப் பரஸ்பர பரிமாற்றல் போன்ற சாதனங்கள் மற்றும் தொகுதிக்கடன்கள் தற்போதுள்ள கட்டமைப்பின் பிணையுறுதித் தொகுப்பிற்குப் புதுமையான பிணையுறுதியாக ஆராயப்படலாம். இலங்கையில் இச்சாதனங்களுக்கான விலையிடல் பொறிமுறையொன்றினை உருவாக்குவதானது மற்றுமொரு புதுமையான முன்முயற்சியாகவும் கவனமான பரிசீலனை மற்றும் கட்டமைக்கப்பட்ட நடைமுறைப்படுத்தல் என்பவற்றினைத் தேவைப்படுத்தும் குறிப்பிடத்தக்க முன்னெடுப்பொன்றாகவும் காணப்படும்.

## 5. தொகுப்பு

சந்தைக்குத் திரவத்தன்மையினை வழங்குவதானது மத்திய வங்கிக்கு செலவொன்றாயமைகின்றது. பல்வேறு குறிக்கோள்களைச் சமநிலைப்படுத்துவதற்கு பெரும்பாலான மத்திய வங்கிகள் உள்நாட்டு-நாணய அரச பிணையங்களிற்கு அப்பால் தகைமையுடைய பிணையுறுதியின் வீச்சினை விரிவுபடுத்துகின்றன. கொடுகடன், திரவத்தன்மை, செலாவணி வீதம் மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் போன்ற மேலதிக இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கு இடையிலான சமநிலைப்படுத்தல்களை முகாமைத்துவம் செய்வதனை இது தேவைப்படுத்துகின்ற வேளையில், வினைத்திறன்மிக்க நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலிற்கும் திரவத்தன்மை முகாமைத்துவத்திற்கும் பரந்தளவிலான இணைத்தரப்பினர் அணுகலினை நிச்சயப்படுத்துகின்றது.

அண்மைய நிதியியல் நெருக்கடி மற்றும் கொவிட்-19

உலகளாவிய நோய்த்தொற்று என்பவற்றின் அனுபவத்துடன் இலங்கை மத்திய வங்கி அதன் தற்போதுள்ள பிணையுறுதிக் கொள்கையை மீளாய்வு செய்கின்ற செயன்முறையில் ஈடுபட்டுள்ளதுடன் நிதியியல் சந்தையில் மேலதிக அபிவிருத்திகளையும் எதிர்பார்க்கின்றது. அவற்றில், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ள பங்குகள், அசையும் மற்றும் அசையாத சொத்துக்கள் போன்ற பல்வேறு வகைகளிலான பிணையுறுதிகளுக்குத் தகைமையுள்ள பிணையுறுதித் தளத்தினை விரிவுபடுத்துவதன் மூலம் அவசரக் கடன் மற்றும் முற்பணங்களை வழங்குதல் குறித்து தற்போதுள்ள பொறிமுறையினை வலுப்படுத்துவதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. பிணையுறுதித் தளத்தின் விரிவாக்கமானது இலங்கை மத்திய வங்கியின் திரவத்தன்மைத் தொழிற்பாடுகளைப் பன்முகப்படுத்தி, வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் சொத்துக்களின் பரந்தளவிலான தொகுப்பொன்றிற்கு எதிராக நிதியிடலினை அணுக முடியுமென்பதனை நிச்சயப்படுத்துவதன் மூலம் அதிர்வுகளுக்கு மிகவும் தாக்குப்பிடிக்கக்கூடிய நிதியியல் முறைமையினை உருவாக்கின்றது. மேலும், பொருளாதார வீழ்ச்சிகள் அல்லது வங்கித்தொழில் நெருக்கடிக் காலங்களில், பரந்தளவிலான பிணையுறுதித் தளமொன்று பொருளாதாரத்தின் அழுத்தமிக்க பிரிவுகளினுள் திரவத்தன்மையினை உட்செலுத்துவதன் மூலம் மிகவும் நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த விதத்தில் இலங்கை மத்திய வங்கி பதிலிறுத்துவதனை அனுமதிக்கிறது.

**உசாத்துணை:**

Bindseil U. (2004) “The Operational Target of Monetary Policy and the Rise and Fall of Reserve Position Doctrine”, European Central Bank Working Paper Series.

Bindseil U and Papadia F. (2006) “Credit risk mitigation in central bank operations and its effects on financial markets: the case of the Eurosystem”, European Central Bank.

Bank for International Settlements. (2015). “Central Banks operating frameworks and collateral markets”.

Chailloux A., Gray S. and McCaughrin R. (2008) IMF Working Paper, Central Bank Collateral Frameworks: Principles and Policies.

Rule G. (2015), Understanding the Central Bank Balance Sheet, Bank of England.

Zorn L. and Garcia A. (2011) “Central Bank Collateral Policy: Insights from Recent Experience”.

# ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றம் மீதான கட்டமைப்பு சமவாயத்தின் நடவடிக்கை: தணித்தல், இசைவாக்கமடைதல், இழப்பு அத்துடன் சேதம் என்பன மீதான உலகளாவிய காலநிலை சார்ந்த கடப்பாடுகளை மதிப்பிடுதல்



திரு. எச் ஆர் டி என் திலகரத்ன, உதவிச் செயலாளர், செயலகத் திணைக்களம்

## அறிமுகம்

காலநிலை மாற்றம், இனிமேலும் தொலைவிலுள்ள அக்கறையொன்றல்ல என்பதுடன் அதன் தாக்கங்கள் எதிர்பாராத வெப்ப அலைகள் தொடக்கம் அழிவுமிக்க வெள்ளப்பெருக்குகள் வரை உலகின் ஒவ்வொரு கண்டத்திலும் உணரப்பட்டு வருகின்றது. இது, பொருளாதாரங்களை இடையூறுக்குள்ளாக்குகின்றது, சமூகங்களை இடம்பெயரச்செய்கின்றது, சூழல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கு அச்சுறுத்தல்விடுகின்றது. இங்கு, உலகம் பகிரப்பட்ட சர்வதேச கட்டமைப்பொன்றின் கீழ் ஒருமுகப்படுத்தப்பட்ட எதிர்வினையாற்றலை வேண்டி நிற்கின்றது. அதற்கமைய, காலநிலை முறைமைக்கு அபாயகரமான மானிட தூண்டுதலளிக்கப்பட்ட இடைத்தலையீட்டைத் தடுக்கின்ற மட்டத்தில் வளிமண்டலத்தில் பச்சைவீட்டு வாயுச் செறிவுகளை நிலைநிறுத்தும் முதன்மைக் குறிக்கோளுடன் பிரேசிலில் இடம்பெற்ற றியோ புவி உச்சி மாநாட்டின் போது ஐக்கிய நாடு காலநிலை மாற்றம் மீதான கட்டமைப்பு சமவாயம் (UNFCCC) 1992இல் தாபிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றம் மீதான கட்டமைப்பு சமவாயம் காலநிலை மாற்றத்திற்குத் தீர்வுகாண்பதற்கான அடிப்படை சர்வதேச ஒப்பந்தமாகப் பணியாற்றி கியோடோ ஒப்பந்தம் மற்றும் பரிஸ் உடன்படிக்கை என்பன உள்ளடங்கலாக முக்கிய காலநிலை உடன்படிக்கைகளுக்கான கட்டமைப்பை ஏற்படுத்தியுள்ளது.

திறத்தவர்களின் மாநாடு (Conference of the Parties - COP) என்பது ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றம் மீதான கட்டமைப்பு சமவாயத்தின் முதன்மைத் தீர்மானம் மேற்கொள்ளும் அங்கமாகும். திறத்தவர்களின் சமவாயத்தின் அங்குரார்பணம் ஜேர்மனியில் 1995இல் இடம்பெற்ற அதேவேளை 30 ஆவது திறத்தவர்களின் மாநாடு 2025 நவெம்பரில் பிரேசிலில் இடம்பெறுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. காலநிலை நடவடிக்கைகளில் உலகளாவிய ஒத்துழைப்பினை ஒருங்கிணைப்பதற்கு உலகிலுள்ள 198 நாடுகளை பொதுவான தளமொன்றிற்குள் இது ஒன்றுகூடச் செய்கின்றது. காலநிலை நடவடிக்கைகளின் முன்னேற்றத்தையும் செயல்திறன்வாய்ந்த தன்மையினையும் மதிப்பிடுவதற்கும் நாடுகள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் காலநிலை மாற்றத்தின் தாக்கத்திற்கு தீர்வுகாண்பற்கு நிதியியல் ரீதியாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் இயலளவைக் கட்டியெழுப்புவதற்கு ஆதரவளிப்பதற்கும் திறத்தவர்கள் ஆண்டுதோறும் கூடுகின்றனர். இக்கட்டமைப்பு அது தொடங்கப்பட்டதிலிருந்து "பொதுவான ஆனால் வேறு பொறுப்புக்களை" கொண்ட கோட்பாடுகளை அங்கீகரித்துள்ளது. அதற்கமைய, இணைப்பு I திறத்தவர்கள் (அபிவிருத்தியடைந்த நாடுகள்) வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதில் முன்னணி வகிப்பதற்கு பிணிக்கின்ற கடப்பாடுகளின் கீழ் ஆண்டுதோறும் பச்சை வீட்டு வாயுப் பதிவேடுகளை சமர்ப்பிப்பதற்கு வேண்டப்பட்டுள்ளனர். அதேவேளை, இணைப்பு I அல்லாத திறத்தவர்கள் (அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள்) ஒவ்வொரு நான்கு ஆண்டுகளுக்கும் அவற்றின் தேசிய தொடர்பூட்டலின் பாகமாக பச்சை வீட்டு வாயு பதிவுகளை சமர்ப்பிக்குமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர், ஆயினும், அது கடப்பாடல்ல.

அவ்வப்போதான மற்றும் தீவிரமடைகின்ற காலநிலை மாற்றத்தாக்கங்களுக்கு எதிர்வினையாற்றுவதில் கட்டமைப்பினால் தணித்தலை முதன்மையாகக் கையாளுதல் மற்றும் இசைவாக்கிக்கொள்ளுதலுக்கும் இழப்பு மற்றும் சேதம் என்பவற்றுக்கும் அதன் நோக்கெல்லை எவ்வாறு

முன்னேற்றகரமாக விரிவடைகின்றது என்பது பற்றியும் கட்டமைப்பின் மூலம் எடுக்கப்பட்ட காலத்திற்குகந்த நடவடிக்கைகளையும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றம் மீதான கட்டமைப்பு சமவாயம் கடந்த மூன்று தசாப்பதங்களுக்கு மேல் உலகளாவிய காலநிலை நடவடிக்கையினை எவ்வாறு வழிநடத்துகின்றது என்பது பற்றி மதிப்பிடுவதற்கு இம்முயற்சிகளின் பரிணாமவளர்ச்சியினைப் புரிந்துகொள்வது அத்தியாவசியமாகும்.

## ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றம் மீதான கட்டமைப்பு சமவாயத்தின் கீழ் காலநிலை மாற்றத் தணிப்பின் பரிணாம வளர்ச்சி

காலநிலை மாற்றத் தணிப்பு என்பது உலகளாவிய வெப்பமயமாதலை மெதுவடையச் செய்து, காலநிலை மாற்றத்தின் பாதகமான தாக்கங்களை மட்டுப்படுத்துவதை மையப்படுத்தி பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளைக் குறிக்கின்றது. சூரியசக்தி மற்றும் காற்று போன்ற தூய சக்தி மூலங்களை அது ஊக்குவிக்கின்ற அதேவேளை, சக்தி வினைத்திறனை மேம்படுத்தி மீள்காடாக்கல் போன்ற நிலைபெறத்தக்க நிலப்பயன்பாட்டு நடத்தைகளை மேம்படுத்துவதுடன் பல்வேறு துறைகளிலும் குறைந்த காபன் தொழில்நுட்பங்களை பின்பற்றுவதையும் ஊக்குவிக்கின்றது. அதற்கமைய, ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றம் மீதான கட்டமைப்பு சமவாயத்தின் கவனம் 1992 தொடக்கம் 2000 வரை முக்கியமாக முன்னேற்றகரமான தணிப்பு நடவடிக்கைகள் மீது மையப்படுத்தப்பட்டிருந்தது.

தணிப்பு நிகழ்ச்சிநிரலின் முதலாவது மைல்கல் 1997இல் யப்பானின் கியோட்டாவில் திறத்தவர்களின் மாநாடு 3இல் அங்கீகரிக்கப்பட்ட கியோட்டா உடன்படிக்கையாகும். ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றம் மீதான கட்டமைப்பு சமவாயத்தின் கீழ் முதலாவது சட்ட ரீதியாகப் பிணிக்கின்ற உடன்படிக்கை என்றவகையில் 37 அபிவிருத்தியடைந்த நாடுகளும் மாறுதலடைகின்ற பொருளாதாரங்களும் 2008-2012 காலப்பகுதியில் 1990இன் மட்டங்களுக்குக் கீழ் சராசரியாக 5.2 சதவீதத்தினால் பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தினைக் குறைப்பதற்கு இணங்கின. இவ்வுடன்படிக்கையின் கீழ் தூய அபிவிருத்திப் பொறிமுறை, இணைந்த நடைமுறைப்படுத்தல் மற்றும் வாயு வெளியேற்ற வர்த்தகம் உள்ளடங்கலாக மூன்று சந்தை அடிப்படையிலமைந்த பொறிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. குறிப்பாக, தூய அபிவிருத்திப் பொறிமுறை 2005இல் அதன் தொழிற்பாடுகளைத் தொடங்கி, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் வாயு வெளியேற்ற குறைப்புக் கருத்திட்டங்களில் முதலிடுவதன் மூலம் அவற்றின் கடப்பாடுகளின் பாகத்தை நிறைவுசெய்வதற்கு அபிவிருத்தியடைந்த நாடுகளை இயலச்செய்த அதேவேளை அபிவிருத்தி நலன்களுடன் சேர்த்து தணிப்பு நன்மைகளைக் கொண்டு வந்தன.

2010இல், மெக்சிக்கோவின் கென்கன் நகரில் திறத்தவர்களின் மாநாடு 16இன் போது தேசிய ரீதியாகப் பொருத்தமான தணிப்பு நடவடிக்கைகள் பற்றிய எண்ணக்கருவினை உத்தியோகபூர்வமாக அங்கீகரித்ததன் மூலம் அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகள் தணிப்பு நிகழ்ச்சிநிரலில் உள்வாங்கப்பட்டன. “பொதுவான ஆனால் வேறுபட்ட பொறுப்புக்கள்” பற்றிய கோட்பாட்டின் கீழ் பச்சை வீட்டு வாயு தணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை இயலச்செய்தது. இக்காலப்பகுதியின் போது பசுமைக் காலநிலை நிதியமும் உருவாக்கப்பட்டது. அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகளில் தணிப்பு மற்றும் இசைவாகிக்கொள்ளும் கருத்திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கு அரசாங்க மற்றும் தனியார் மூலங்களிலிருந்து 2020 அளவில் ஆண்டுதோறும் ஐ.அ.டொலர் 100 பில்லியனை திரட்டும் வகையில் இது வடிவமைக்கப்பட்டது.

2013இல் போலந்தில் திறத்தவர்களின் மாநாடு 19இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட REDD+ (காடழிப்பு மற்றும் வன சீர்குலைவு என்பவற்றிலிருந்து வாயு வெளியேற்றத்தைக் குறைத்தல்) இற்கான வார்சோ கட்டமைப்புடன் தணிப்பு முயற்சிகள் தொடர்ந்தும் இடம்பெற்றன. REDD+ என்பது வனத் துறையிலிருந்து வாயு வெளியேற்றங்களை குறைப்பதனை உறுதிப்படுத்துவதன் மூலம் காலநிலை நிதியைப் பெறுவதற்கு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட காலநிலை தணிப்புப் பொறிமுறையொன்றாகும். இப்பொறிமுறை வனப் பாதுகாப்பு, நிலைபெறத்தக்க நிலப்பயன்பாடு மற்றும் வன காபன் இருப்பினை மேம்படுத்துதல் என்பவற்றினூடாக காலநிலை மாற்றத்தை முறியடிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான காலநிலை தணிப்புக் கருத்திட்டங்களை வழங்குகின்றது.

2015இல், பிரான்ஸில் திறத்தவர்களின் மாநாடு 21இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிஸ் உடன்படிக்கை ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றம் மீதான கட்டமைப்பு சமவாயத்தின்

கீழ் காலநிலை மாற்றத்தின் திருப்புமுனையொன்றாகும். இவ்வுடன்படிக்கை கியோட்டோ உடன்படிக்கையின் மேலிருந்து கீழ்நோக்கிய அனுகுமுறையைப் போலன்றி "தேசிய ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புக்கள்" என்ற கீழிலிருந்து மேல்நோக்கிய முறைமையொன்றினை அறிமுகப்படுத்தியது. உலக வெப்பமயமாதலை 2°C இற்கு நன்கு கீழ் 1.5°C ஆக விரும்பத்தக்க மட்டத்தில் கைத்தொழிலுக்கு முந்திய மட்டங்களுக்கு மேல் மட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை அனுசரித்து ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் அவற்றின் தேசிய ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புக்களைச் சமர்ப்பிக்குமாறு பரிஸ் உடன்படிக்கையின் அனைத்து திறத்தவர்களையும் வேண்டியது. இங்கு வாயு வெளியேற்ற இலக்குகள் மீதானவையன்றி அவர்கள் உரியகாலத் திட்டங்களை சமர்ப்பிப்பதற்கான நடைமுறைகளுடன் சட்ட ரீதியாகப் பிணிக்கப்பட்டனர். இத்திட்டங்கள், அவற்றிற்குரிய வாயு வெளியேற்றக் குறைப்பு இலக்குகளை நிர்ணயிக்கின்ற அதேவேளை நீண்டகாலத்தில் பூஜ்ஜிய வாயு வெளியேற்ற இலக்குகளை நிர்ணயிப்பதன் மூலம் நாடுகள் அவற்றின் பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தை எவ்வாறு குறைக்கலாம் என்பது பற்றி விளக்குகின்றது. தேசிய ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புக்கள் பச்சை வீட்டு வாயுப் பதிவேடுகள் மற்றும் வேண்டப்பட்ட மற்றும் கிடைக்கப்பெற்ற ஆதரவு என்பன பற்றிய முன்னேற்றத்தை அறிக்கையிடுவதற்கு பரிஸ் உடன்படிக்கையின் கீழ் 2024 தொடக்கம் ஒவ்வொரு இரு ஆண்டுகளுக்கும் ஆண்டிற்கு இருமுறை வெளியிடப்படும் வெளிப்படைத்தன்மை அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறும் திறத்தவர்களை இது தேவைப்படுத்துகின்றது.

2021இல், கிளாஸ்கோவில் இடம்பெற்ற திறத்தவர்களின் மாநாடு 26இல் கிளாஸ்கோ காலநிலைப் பொதி, 2022இன் இறுதியளவில் அவற்றின் தேசிய ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புக்களை வலுப்படுத்துமாறு நாடுகளை வலியுறுத்தியதுடன் 1.5°C இலக்கினை நிறைவுசெய்வதற்கு தற்போதைய வாக்குறுதிகள் போதாது என்பதனை அங்கீகரித்து, திறத்தவர்களின் சமவாய வரலாற்றின் முதற்தடவையாக குறைக்கப்படாத நிலக்கரியை கட்டங்கட்டமாகக் குறைப்பதற்கும் திறத்தவர்கள் இணங்கினர்.

2023இல், டுபாயில் திறத்தவர்களின் மாநாடு 28இல் நிறைவுசெய்யப்பட்ட முதலாவது உலகளாவிய தொகை எடுத்தல் பரிஸ் உடன்படிக்கையின் கீழ் காலநிலை நடவடிக்கைகள் பற்றிய கூட்டான முன்னேற்றத்தை அளவிட்டது. தற்போதுள்ள தணிப்பு முயற்சிகள் போதாமல் உள்ளன என்றும் பல நாடுகளின் தேசிய ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புக்கள் 2050 அளவில் தேறிய பூஜ்ஜிய இலக்குகளை அடைவதற்கு குறிக்கோள் போதாதவை என்றும் கண்டறியப்பட்டது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் அவற்றின் முழுமையான தணிப்பு உள்ளார்ந்தங்களை புரிந்துகொள்வதற்கு போதுமான நிதி, தொழில்நுட்ப, இயலளவு விருத்தி என்பவற்றை அவை கொண்டிருக்கவில்லை என்பதனையும் உலகளாவிய தொகை எடுத்தல் சுட்டிக்காட்டியது.

### ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றம் மீதான கட்டமைப்பு சமவாயத்தின் கீழ் காலநிலை மாற்றத்திற்கு இசைவாகிக்கொள்ளும் தன்மையின் பரிணாம வளர்ச்சி

ஆரம்ப ஆண்டுகளில் ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றம் மீதான கட்டமைப்பு சமவாயத்தின் காலநிலை நிகழ்ச்சிநிரலில் தணித்தலுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டிருந்த அதேவேளை, தணிப்பு நடவடிக்கைகளைக் கொண்டு மாத்திரம் காலநிலையை நிலைப்படுத்துவதற்கு நீண்டகாலம் எடுக்கின்றது என்பதனை காலநிலை மாற்றம் மீதான அரசாங்கங்களுக்கிடையிலான குழாம் வெளியிட்டது. பல அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் விசேடமாக குறைவாக அபிவிருத்தியடைந்துவருபவையும் சிறிய தீவு அபிவிருத்தியடைந்துவருகின்ற தேசங்களும் கடுமையான காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் காரணமாக அதிகம் வருந்துகின்றன. இதன் விளைவாக, ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றம் மீதான கட்டமைப்பு சமவாயச் செயன்முறைகளில் காலநிலை உபாயங்களில் தணித்தலுக்கான குறைநிரப்பாக 2000ஆம் ஆண்டின் பின்னர் இசைவாகிக்கொள்ளுதல் அங்கீகரிக்கப்பட்டது.

2001இல் மொரோக்கோவில் திறத்தவர்களின் மாநாடு 7இல் அங்கீகரிக்கப்பட்ட மராக்கேஸ் உடன்படிக்கை இசைவாகிக்கொள்ளும் பணிப்புரையின் முதலாவது குறிப்பிடத்தக்க படிமுறையாகும். கியோட்டோ ஒப்பந்தத்திற்கு இணைக்கப்பட்ட இசைவாகிக்கொள்ளும் நிதியம், காலநிலை மாற்றத்திற்கு பாதிக்கப்படக்கூடிய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் இசைவாகிக்கொள்ளும் கருத்திட்டங்களுக்கு நிதியிடுவதற்கு தாபிக்கப்பட்டதுடன் தூய்மையான அபிவிருத்திப் பொறிமுறை கருத்திட்டங்களிலிருந்து கிடைக்கின்ற பெறுகைகளின் பங்கின் மூலம் நிதியளிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, தேசிய இசைவாகிக்கொள்ளும் நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டங்களின் நடைமுறைப்படுத்தலுக்கிசைவாக அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகளில் இசைவாகிக்கொள்ளும் செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதற்கு

உலகளாவிய சூழல் வசதியின் கீழ் குறைவாக அபிவிருத்தியடைந்த நாடுகள் நிதியமும் தாபிக்கப்பட்டது.

2010இல் கன்கூனில் திறத்தவர்களின் மாநாடு 16இல் இசைவாகிக்கொள்தல் மீதான நடவடிக்கையை வலுப்படுத்திக்கொள்வதற்கு தேசிய இசைவாகிக்கொள்ளும் திட்டங்களை அறிமுகப்படுத்தி, கன்கூன் இசைவாகிக்கொள்ளல் கட்டமைப்பு தொடங்கிவைக்கப்பட்டது. அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் குறிப்பாக குறைவாக அபிவிருத்தியடைந்த நாடுகள் தேசிய இசைவாகிக்கொள்ளும் திட்டங்களின் கீழ் நடுத்தரகால மற்றும் நீண்டகால இசைவாகிக்கொள்ளும் தேவைகளை இனங்காணுமாறு ஊகிக்கப்பட்டன. இத்தேசிய இசைவாகிக்கொள்ளும் திட்டங்கள் இசைவாகிக்கொள்ளுதலை தேசிய அபிவிருத்தித் திட்டமிடலுக்குள் ஒருங்கிணைப்பதற்கு ஆதரவளிப்பதற்கு தேசிய இசைவாகிக்கொள்ளும் நடவடிக்கை நிழ்ச்சித்திட்டங்கள் மூலம் பெற்றுக்கொண்ட அனுபவத்தின் மீது கட்டியெழுப்பப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

2015இன் பரிஸ் உடன்படிக்கையானது காலநிலை மாற்றம் ஏற்கனவே இடம்பெறுகின்றது என்றும் இசைவாகிக்கொள்ளும் இயலளவு, தாக்குப்பிடிக்கும் தன்மை மற்றும் பாதிக்கப்படும் தன்மையினைக் குறைத்தல் என்பவற்றை வலுப்படுத்துவதற்கு உலகளவிலான ஒத்துழைப்பு அவசியம் என்பதையும் அங்கீகரிப்பதன் மூலம் தணித்தலுக்கு சமனான நிலையில் இசைவாகிக்கொள்ளலையும் உயர்த்தியது. அதற்கமைய, 1.5°C–2°C வெப்பநிலை இலக்கிற்கு போதுமாக இசைவாகிக்கொள்ளல் எதிர்வினையாற்றலை உறுதிசெய்வதை நோக்காகக்கொண்டு முதன்முதல் உலகளாவிய இசைவாகிக்கொள்ளல் இலக்கினை தாபிப்பதன் மூலம் உறுப்புரை 7 இசைவாகிக்கொள்ளுதலுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. தேசிய இசைவாகிக்கொள்ளும் திட்டங்களின் கீழ் இனங்காணப்பட்ட நடைமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் கிடைக்கப்பெற்ற அல்லது தேவையான ஆதரவு உள்ளடங்கலாக அவற்றின் இசைவாகிக்கொள்ளல் முன்னுரிமைகளை தேசிய ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள் ஊடாக தொடர்பூட்டுவதற்கும் முன்னேற்ற அறிக்கைகளை ஆண்டுக்கு இருமுறை வரும் வெளிப்படைத்தன்மை அறிக்கையூடாக அறிக்கையிடுவதற்கும் திறத்தவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். மேலும், கூட்டான முன்னேற்றத்தை அறிந்துகொள்வதற்காக 2023 இலிருந்து தொடங்கி ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் நடாத்தப்படுகின்ற உலகளாவிய கையிருப்புக் கணக்கெடுப்பின் மையக்கூறாகவும் இசைவாகிக்கொள்ளல் அடையாளப்படுத்தப்பட்டது.

### ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றம் மீதான கட்டமைப்பு சமவாயத்தின் கீழ் இழப்பு மற்றும் சேதம் பற்றிய பரிணாம வளர்ச்சி

இழப்பு மற்றும் சேதம் பற்றிய எண்ணக்கரு தணித்தல் அல்லது இசைவாகிக்கொள்ளல் ஊடாக தவிர்க்கப்படக்கூடியதல்லாத காலநிலை மாற்றத்தின் மாற்றமுடியாத தாக்கங்களை தீர்ப்பதற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இசைவாகிக்கொள்ளும் வரையறைகளை சில காலநிலைத் தாக்கங்கள் தாண்டிச்செல்கின்றன என்பதை அங்கீகரித்ததன் பின்னர் இழப்பு மற்றும் சேதம் மீது ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றம் மீதான கட்டமைப்பு சமவாயத்தின் கவனம் அதிகளவில் திசைதிரும்பியது. இக்காலநிலைத் தாக்கங்கள் விளைச்சல் மற்றும் உட்கட்டமைப்புச் சேதங்கள் போன்ற பொருளாதார இழப்புக்களையும் கலாசார அத்துடன் உயிர்பல்வகைமை போன்ற பொருளாதாரமற்ற இழப்புக்களையும் உள்ளடக்குகின்றன. ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றம் மீதான கட்டமைப்பு சமவாயம், 2010இன் ஆரம்பத்தில் தணிப்பு மற்றும் இசைவாகிக்கொள்ளுதல் ஆகியவற்றுக்கான குறைநிரப்பும் தூண் ஒன்றாக இழப்பு மற்றும் சேதப் பொறிமுறையை உத்தியோகபூர்வமாக அங்கீகரித்தது.

காலநிலை இடர்நேர்வுக் குறைப்பு மற்றும் இடர்நேர்வைக் கைமாற்றுதல் (காப்புறுதி) என்பவற்றுக்காக கட்டமைக்கப்பட்ட இழப்பு மற்றும் சேதத்திற்கான வார்சோ பன்னாட்டு பொறிமுறை ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றம் மீதான கட்டமைப்பு சமவாயத்தின் கீழ் முக்கிய நிறுவனசார் ஏற்பாடாக 2013இல் போலந்தில் திறத்தவர்களின் மாநாடு 19இல் தாபிக்கப்பட்டது. இழப்பு மற்றும் சேதப் பொறிமுறையும் தணித்தல் மற்றும் இசைவாகிக்கொள்ளுதல் என்பவற்றுடன் இணைந்து வேறான தூண் ஒன்றாக 2015இல் பாரிஸ் உடன்படிக்கையின் 8ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்பட்டது. 2019இல் மட்றிற் நகரில் திறத்தவர்களின் மாநாடு 25இல் பாதிக்கப்படக்கூடிய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை தொழில்நுட்ப ஆதரவு, அறிவு மற்றும் மூலவளங்களுடன் இணைப்பதற்கு வார்சோ பன்னாட்டு பொறிமுறையின் கீழ் இழப்பு மற்றும் சேதத்திற்கான சாண்டியாகோ வலையமைப்பை திறத்தவர்கள் தொடங்கினர். இறுதியாக, 2022இல் ஷாம் எல் சேய்க் இல் திறத்தவர்களின் மாநாடு 27இல் இழப்பு மற்றும் சேத நிதியமொன்றினைத் தாபிப்பதற்கான வரலாற்று இணக்கப்பாட்டினை திறத்தவர்கள் எட்டினர். இது, காலநிலை நீதியை நோக்கி எடுக்கப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த படிமுறையொன்றாகக் கருதப்பட்டது.

இழப்பு மற்றும் சேத நிதியமானது பாதகமான காலநிலை மாற்றத்தாக்கங்களுக்கு விசேடமாக அத்தாக்கங்கள் இசைவாகிக்கொள்ளும் வரையறைகளைத் தாண்டி காணப்படுகின்ற போது பாதிக்கப்படக்கூடியவையாக இருக்கின்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு வரலாற்று ரீதியாக உயர்வாக புகை வெளியேற்றுகின்ற அபிவிருத்தியடைந்த நாடுகளிலிருந்து நிதியியல் ஆதரவினை வழங்குவதை நோக்காகக் கொள்கின்ற கூட்டு நிதியமாகும். ஆகையினால், இந்நிதியம் காலநிலை நீதி மற்றும் உலகளாவிய ஒருமைப்பாடு என்பவற்றைப் பிரதிபலிக்கின்றது. காலநிலை நெருக்கடியிலிருந்து வருந்துகின்ற மக்களை மீட்டெடுப்பதை இந்நிதியம் நோக்காகக் கொண்டுள்ளது. நிதியத்தின் வெற்றியானது மூலவளங்களைத் திரட்டுதல் மற்றும் அதிகரித்துக்கொள்வதற்கான அதன் இயலுமை அத்துடன் யாருக்காக நிதியம் தாபிக்கப்பட்டதோ அவர்களுக்காக உண்மையில் அம்மூலவளங்களிலிருந்து அச்சமூகங்கள் நன்மைபெறுகின்றன என்பதை உறுதிசெய்தல் மீதே அமைந்துள்ளது. அதற்கமைய, இழப்பு மற்றும் சேத நிதியம் ஐக்கிய அரபு இராச்சியம், ஜேர்மனி, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளடங்கலான நாடுகளிலிருந்து தொடக்க நிதியியல் வாக்குறுதிகளுடன் 2023இல் டுபாயில் இடம்பெற்ற திறத்தவர்களின் மாநாடு 28இல் தொழிற்படத் தொடங்கியது. முதல் நான்கு ஆண்டுகளுக்கும் இடைக்கால நிதி வழங்குநராக உலக வங்கி தெரிவுசெய்யப்பட்டது.

**வரைபடம் 1: 2025 யூலையின் படி இழப்பு மற்றும் சேத நிதித் தேவைகளுக்கும் உண்மையான பங்களிப்புகளுக்கும் இடையிலான தெளிவான இடைவெளி**




*மூலம்:* UNFCCC, உலக வங்கி

## இழப்பு மற்றும் சேத நிதியத்தைத் தாபிப்பதில் மத்திய வங்கிகளின் வகிபாகம்

மத்திய வங்கிகள் நாணய மற்றும் நிதியியல் உறுதிப்பாடு மீது அவற்றின் பொறுப்பாணை கவனம் செலுத்துகின்ற போதிலும் காலநிலை நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதில் அவற்றின் வகிபாகம் முக்கியமானதாக விளங்குகின்றது. அதற்கமைய, பாதிக்கப்படக்கூடிய நாடுகளில் இசைவாக்கிக்கொள்ளும் வரையறைகளையும் தாண்டிச்செல்கின்ற மாற்றமுடியாத காலநிலை தாக்கங்களை இழப்பு மற்றும் சேத நிதியப் பொறிமுறை கையாளுவதனால் 2023இல் அதனை தாபிப்பதுடன் இணைந்த குறிப்பான வகிபாகத்தை மத்திய வங்கிகள் முனைப்புடன் ஆற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன. மத்திய வங்கிகள் இழப்பு மற்றும் சேத நிகழ்வுகளின் குறிப்பாக காலநிலை மூலம் பாதிக்கப்படத்தக்க பொருளாதாரங்களில் பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் கசிவுத் தாக்கங்களைக் கண்காணிப்பதன் மூலமும் காலநிலை அதிர்வுகளின் பின்னர் திரவத்தன்மை ஆதரவை உறுதிசெய்வதற்கு உலகளாவிய பங்காளர்களுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலமும் அதன் ஆக்கபூர்வமான நடைமுறைப்படுத்தலுக்கு ஆதரவளிக்கலாம். பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் கசிவுத் தாக்கங்கள் என்பது உடனடி பாதிக்கப்பட்ட பிரதேசங்களைத் தாண்டிச்செல்கின்ற அத்துடன் நிதியியல் உறுதிப்பாட்டிற்குச் செல்வாக்குச் செலுத்துகின்ற பரந்த பொருளாதார மற்றும் நிதியியல் விளைவுகளைக் குறிப்பிடுகின்றது. பாரிய சூறாவளி ஒன்றின் பின்னர் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி சுருக்கமடைதல், உணவு உற்பத்தி இழப்பு காரணமாக பணவீக்கம் உயர்வடைதல், மக்கள் இடம்பெயர்தல் காரணமாக தொழிலாளர் உற்பத்தித்திறன் குறைதல், கடுமையான வானிலை நிகழ்வுகள் மூலம் அழிவடைந்த உட்கட்டமைப்புக்களை மீளக்கட்டியெழுப்புவதற்கு அரசாங்கக் கடன்பெறுதல்கள் அதிகரித்தல், வெள்ளப்பெருக்கினால் சேதமாக்கப்பட்ட வீதிகள் மற்றும் துறைமுகங்கள் காரணமாக வர்த்தகப் பாய்ச்சல் இடையூறுக்குள்ளாகுதல் போன்றன இழப்பு மற்றும் சேத நிகழ்வுகளின் பேரண்டப் பொருளாதார கசிவுத்தாக்கங்களாகக் கருத்திற்கொள்ளப்படலாம். மேலும், அனர்த்த பாதிப்புக் காரணமாக வங்கித்தொழில் துறையில் அதிகரிக்கின்ற தவணைதவறும் இடர்நேர்வு, பாதிக்கப்படத்தக்க பிராந்தியங்களில் முதலீட்டாளர் நம்பிக்கை இழப்பதன் காரணமாக முதலீடுகள் குறைவடைதல், காப்புறுதிக் கட்டுப்பணங்கள் அதிகரித்தல், காலநிலை அதிர்வுகள் காரணமாக செலாவணி வீதங்கள் பாதிக்கப்படுதல் என்பன நிதியியல் கசிவுத்தாக்கங்களாகக் கருதப்படலாம். மேலும், உலகளாவிய முறைமைகளின் ஒன்றுடனொன்று இணைந்த தன்மை உலகளாவிய வழங்கல் சங்கிலி இடையூறின் மூலமான தாக்கங்களை பரவச்செய்தல், அதிகரிக்கின்ற எல்லை கடந்த புலம்பெயர்வு மற்றும் பன்னாட்டு நிதியியல் சந்தைகளை பாதித்தல் என்பன மூலம் பாதிக்கப்படலாம். ஆகையினால், மத்திய வங்கிகள் உள்நாட்டு நிதியியல் முறைமைகளுக்குள் நிதியங்கள் உட்பாய்கின்ற அதேவேளை இழப்பு மற்றும் சேத நிதியத்தை ஈர்த்து வினைத்திறன் மிக்கவாறு பகிர்வதற்கு நிதியியல் உட்கட்டமைப்பை உறுதிசெய்வதற்கு அரசாங்கம் மற்றும் தனியார் நிதியுடன் கலந்த இழப்பு மற்றும் சேத நிதியங்கள் பொறிமுறைகளை உருவாக்கு ஆதரவளிக்கவேண்டும்.

## முடிவுரை

இழப்பு மற்றும் சேதத்திற்காக முழுமையாக தொழிற்படுகின்ற நிதியிடல் முகாமைத்துவமொன்றை உருவாக்குதல் உலகளாவிய காலநிலைக் கொள்கையின் மையப் பாகமாகத் தோற்றம் பெற்றுள்ளது. அதற்கமைய, ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றம் மீதான கட்டமைப்பு சமவாயத்தின் கவனம், பேச்சுவார்த்தைகள் தொடக்கம், குறிப்பாக பாதிக்கப்படத்தக்க சமூகங்களுக்கு இழப்பு மற்றும் சேத நிதியம் உண்மையான மற்றும் உரியகால ஆதரவை வழங்குகின்றது, தேசிய ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள் செயல்திறன்வாய்ந்த விதத்தில் நடைமுறைப்படுகின்றன, மற்றும் அபிவிருத்தியடைந்த நாடுகளின் ஆதரவுடன் தேசிய இசைவாக்கிக்கொள்ளும் திட்டங்கள் போன்ற அவற்றின் நீண்டகால உபாயங்களை அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் அமுல்படுத்துகின்றன என்றளவில் நடைமுறைப்படுத்தலுக்கு மாறுதலடைந்து, அதேவேளை, பாரிஸ் இலக்குகளை நிறைவுசெய்வதில் உலகு தடம்புரண்டுள்ளது என்பதனை முதலாவது உலகளாவிய கணக்கெடுப்பு எடுத்துக்காட்டியதுடன் 2025 இலும் அதற்கு அப்பாலும் வலுவான தேசிய ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புக்களுக்கான தேவையை அது வலியுறுத்தியது. இதற்கு மேம்படுத்தப்பட்ட துறைசார் நடவடிக்கைத் திட்டங்கள் (உ-ம். சக்தி, போக்குவரத்து, வேளாண்மை என்பவற்றில்) அத்துடன் முன்னேற்றத்தை தடமறிவதற்கான பொறிமுறைகள் ஆதரவளிக்கின்றன. ஆகையினால், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் புறக்கணிக்கப்படவில்லை எனபதை உறுதிசெய்வதற்கு ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றம் மீதான கட்டமைப்பு சமவாயம் தூய சக்தியை ஈடுபடுத்தலை துரிதப்படுத்துவதற்கும் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கண்காணித்தல்,

முன்னேற்றகரமான முன்கூட்டிய எச்சரிக்கை முறைமைகள், தலைமுறைகளுக்கிடையிலான நீதி, சுதேச உரிமைகள் மற்றும் பாலின சமத்துவம் என்பவற்றுக்கு காலநிலை கொள்கையில் அழுத்தம் கொடுக்கவேண்டும்.

**உசாத்துணை**


1. United Nations Framework Convention on Climate Change (UNFCCC). (1992). https://unfccc.int/resource/docs/convkp/conveng.pdf
2. UNFCCC Conference of the Parties (COP) Summaries. (Various years). Official UNFCCC COP Decisions and Outcomes. https://unfccc.int/process/conferences
3. Kyoto Protocol. (1997). Kyoto Protocol to the United Nations Framework Convention on Climate Change. https://unfccc.int/kyoto_protocol
4. Paris Agreement. (2015). Adopted at COP21, Paris, France. https://unfccc.int/process-and-meetings/the-paris-agreement/the-paris-agreement
5. Warsaw International Mechanism for Loss and Damage (WIM). (2013). COP19 Decision 2/CP.19. https://unfccc.int/topics/adaptation-and-resilience/workstreams/loss-and-damage
6. Cancun Agreements. (2010). COP16 Decisions on Mitigation and Adaptation. https://unfccc.int/decision/cancun-agreements
7. Adaptation Fund. (2001). Established under the Kyoto Protocol. https://www.adaptation-fund.org
8. Least Developed Countries Fund (LDCF). Global Environment Facility (GEF). https://www.thegef.org/ldcf
9. REDD+ Mechanism. (2013). Warsaw Framework for REDD+. https://unfccc.int/topics/land-use/workstreams/redd
10. National Adaptation Plans (NAPs). (2010). Under the Cancun Adaptation Framework. https://unfccc.int/topics/resilience/workstreams/national-adaptation-plans
11. Nationally Determined Contributions (NDCs). (2015). Framework under the Paris Agreement. https://unfccc.int/NDCs
12. Global Stocktake (GST). (2023). First Global Stocktake Report under the Paris Agreement. https://unfccc.int/topics/global-stocktake
13. Glasgow–Sharm el-Sheikh Work Programme on the Global Goal on Adaptation (GGA). (2021–2022). https://unfccc.int/topics/adaptation-and-resilience/workstreams/glasgow-sharm-el-sheikh-work-programme-on-the-global-goal-on-adaptation
14. Santiago Network for Loss and Damage. (2019). COP25 Decision. https://unfccc.int/topics/adaptation-and-resilience/workstreams/loss-and-damage/santiago-network
15. Loss and Damage Fund (L&D Fund). (2022–2023). COP27 & COP28 Decisions. https://unfccc.int/topics/adaptation-and-resilience/workstreams/loss-and-damage
16. Green Climate Fund (GCF). (2010). Established under the Cancun Agreements. https://www.greenclimate.fund
17. Biennial Transparency Reports (BTRs). (Under Paris Agreement). https://unfccc.int/BTR



# நீங்கள் ஓர்

## உண்மைச் சொத்து முகவரா/ஆதனங்களை விருத்தி செய்பவரா அல்லது கூட்டுஆதன விருத்தியாளரா



?

அவ்வாறாயின், 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடும் சட்டத்தின் கீழ் இணங்குவித்தல் அலுவலரொருவரை நியமிப்பதற்கு நீங்கள் வேண்டப்பட்டுள்ளீர்கள். இணங்குவித்தல் அலுவலர் பிரகடனப் படிவத்தை பதிவிறக்கம்செய்து பூர்த்திசெய்த படிவத்தை மின்னஞ்சல் அல்லது பதிவு அஞ்சல் வாயிலாக நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு சமர்ப்பியுங்கள்.

**இணங்கியொழுகுதலை உடனடியாக உறுதிசெய்து உங்களது வியாபாரம் மீதான பாதகமான தாக்கத்தை தவிர்த்திடுங்கள்!**

நிதியியல் உளவறிதல் பிரிவு, இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01.

011-2398908 fiudnfbp@cbsl.lk www.fiusrilanka.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

මූල්‍ය බුද්ධි ඒකකය
நிதியியல் உளவறிதல் பிரிவு
FINANCIAL INTELLIGENCE UNIT